# கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 8 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
பரசைபாக்கம், சென்னை.

Vol 5.] 1932 ஹு நவம்பர் மீ 24உ [No. 46

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 901
2. தமிழ்ப்பாடம்
   களவெண்பா - கலிதொடர்காண்டம் 903
3. நம்மாழ்வார் வைபவம் (4-ம் பத்து, 2-ம் தசகம்) K. இராஜகோபாலாச்சாரியார் B.A., B.L., 905
4. அப்பர் (64 கலைகள்—தர்க்கம்)
   E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 907
5. குடிவாழ்க்கை (Plato's Republic)
   K. இராஜகோபால் 909
6. ஜூலியஸ் ஸீஸர் (அங்கம் 5. களம் 5)
   ஷேக்ஸ்பியர் நாடகம் 911
7. பொதிகைநிகண்டு (ஒரு சொற் பல்பொருட் பெயர்த் தொகுதி)
   S. வையாபுரிப் பிள்ளை B.A. B.L. 912
8. கம்பராமாயணம் (மாரீசன் வதைப்படலம்)
   T. N. சேஷாசலம். B.A. B.L. 914
9. சொல்லூட்டம் 12. 916
10. வர்த்தமானம் 919

## கலாநிலயம்

### அறிவில்லாத் திறமை 4.

தன்னுடைய விருப்பத்திற்குத் தக்கபடி யாதும்வண்ணம் நிலைப்பொருள்களை வேண்டளவு திரித்துக்கொள்கின்ற யந்திர தந்திரச் சூழ்ச்சித்திறமைகளை அறிவென்று மயங்காமல், தன்னுடன் தொடர்புபடுத்துவதின்றியே பிரபஞ்சத்தைப்பாவிக்கவல்ல அறிவின்பால் உய்ப்பதற்கியன்ற, தத்துவஆராய்ச்சி வித்தக நன்னிலை சமயப்பற்று கலையுணர்வு என்னும் இந்நான்கினுள் முன்னைய இரண்டின் தன்மைகளையும் பகர்ந்து பின் சமயப்பற்றின் சாதனையாகிய கடவுட் கருத்தின் கொள்கைகளைச் சோதித்தறிவது நலமெனக் கருதிக் கிரேக்கதேய ப்ளேட்டோவும் அரிஸ்டாட்டலும் கடவுளைப்பற்றி வகுத்துரைத்திருப்பவைகளைக் காட்டினேம். இவ்விருவரும் வாழ்ந்து வரைந்த காலம் இற்றைக்கு இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்னர். இனி, ஹாலண்ட்தேயத்தில் முந்நூறு வருடங்களுக்குமுன் யூதர்குலத்தில் பிறந்த அறிஞர் பேனிடிக்ட்டி ஸ்பைனோஸா என்பவர், கடவுளைப்பற்றிக் குறித்துரைத்த கருத்துக்களைச் சிறிதிங்குச் செப்பலாம். இவருடைய ஜீவியசரித்திரம் கொள்கைகள் சித்தாந்தங்கள் முதலியவைகளைப் பற்றி ஸ்ரீமான் T. R. இராஜகோபால் வரைந்துள்ள கட்டுரைகள் இப்பத்திரிகையின்கண் முன், 20, 21, 22, 23, 24வது இதழ்களில் வந்திருக்கின்றன. நமது நண்பர்கள் இச்செவ்வியில் அக் கட்டுரைகளை இன்னுமோர்முறை ஓதிக்கொள்வது நலம்.

பேனிடிக்ட்டி ஸ்பைனோஸா:—கடவுளின் சித்தத்தால் பிரபஞ்சம் இயங்குகின்றதென்னுமல், தன்னிலே இயற்கையாயமைந்த ஒரு சக்தியால் தானே இப்பிரபஞ்சம் இயங்குவதாகவும், அது இயங்கும்வண்ணம் கடவுளின் சித்தத்திற்குப் பொருந்தியிருக்கின்றதென்று எண்ணவேண்டுமென்றும் அரிஸ்டாட்டல் கூறியது பெரும்பாலும் ஸ்பைனோஸாவின் கருத்திற்கும் இசைந்ததாக இருக்கின்றது. எனினும், அரிஸ்டாட்டலைப்போலல்லாமல், ஸ்பைனோஸா, பிரபஞ்சமேதான் கடவுள் என்பர். எல்லாம் கடவுளில் இருக்கின்றன என்றும், எல்லாம் கடவுளில் வாழ்கின்றனஎன்றும், எல்லாம் கடவுளில் இயங்குகின்றனவென்றும் இவர் கூறுகின்றனர். ஆயினும், பிரபஞ்சம் என்பது ஜடப்பொருள்களால் ஆகிய இந்தத் தோற்றவுலகமே என்று கொண்டு, அத்தோற்றவுலகமே கடவுளென்று நினைப்பதற்கு ஸ்பைனோஸா இடந்தருவதில்லை. பிரபஞ்சவஸ்துக்களை கடவுளென்று மயங்காமல், இந்தப் பிரபஞ்சவஸ்துக்களின் அடிப்படையான மெய்ப்பொருள் ஒன்றே கடவுளெனக் கருதுதல் வேண்டும் என்பார் இவர். நீர் நிலன் அனல் வளி வெளிகளும் இவ்வைம்பெரும் பூதங்களால் ஆகிய நிலைப்பொருள்கள் அனைத்துமே கடவுள் என்பது அவர் கருத்தன்று. இவையனைத்தும் மாறினும் தான் மாறாமலும், அழியினுந் தான் அழியாமலும், அனைத்திற்கும் அடிப்படையாய் நிற்கின்ற ஒரு தனி மெய்ம்மையாம் பொருளே கடவுள் என்பர். எனினும் மரத்தாற் செய்த பெட்டி, என்னுங்கால், பெட்டிக்கு மரம் என்னும்பொருள் முதற்கருவியாவதுபோல், கடவுளென்னும் அம் மெய்ப்பொருள் பிரபஞ்சத்திற்கு முதற்கருவி ஆயிற்றென்பது ஸ்பைனோஸாவின் கருத்தன்று. முதற்கருவிக்கும் மூலமாய் வேறோர் பொருள் உளதென்பார் இவர்.

ஸ்பைநோஸாவின் கருத்துப்படி இயற்கை எனப்படும் இப்பிரபஞ்சம் இருவேறு தோற்றமுடைத்து. ஒன்று, தன் சுயசக்தியுடன் இயங்குகின்ற இயற்கை. அதனைக் 'கருஉயிர்க்கும் பிரபஞ்சம்' (Nature begetting) என்பர் ஸ்பைநோஸா. இதனையே பேர்க்ஸன் என்ற வேறோரறிஞர், "தன்னையே தான் படைத்துக் கொள்ளும் உயிர்ச்சக்தி" என்று அழைக்கின்றார். மற்றைய தோற்றம், இச்சக்தியியக்கத்தால் உண்டாக்கப்பட்டதாம். இதனைப் "பிறந்த பிரபஞ்சம்" (Nature begotten) என்பர். காடும் மலையும் காற்றும் நீரும் நிலனும், கோடானுகோடியாகிய அனைத்தும் இப்பின்னினத்தைச் சேரும். இதனைக் கடவுளென மதியார் ஸ்பைநோஸா. கரு உயிர்க்கும் பிரபஞ்சமானது தன்னையேதான் பெறுகின்றதானாலும், அவ்வாறு பெறப்பட்ட பிரபஞ்சத்தையோ கடவுள் என்னமாட்டார். பெறுதலென்னும் அந் நிரந்தர வரன்முறை ஒழுங்கையே கடவுளென அழைக்கவேண்டும். பெறப்பட்ட பிரபஞ்சப் பொருள்கள்பின்னர் ஒழுகுகின்ற உலகாதி விதிமுறைகளைக் கடவுள் என்னலாகாது. ஆதலின், ஸ்பைநோஸாவின் கொள்கையின்படி, முதற்கருவிக்கும் மூலமாய மெய்ப்பொருள், நிரந்தர நியதி, இயங்கும்இயற்கை அல்லது பிரபஞ்சம், கடவுள், இந்நான்கும் பரியாயங்களாகி ஒன்றையே குறிக்கின்றன. அவ்வாறே இதற்கெதிர், தோற்றம், உலக ஒழுக்கம், இருக்கும் இயற்கை, உலகம், என்னும் இந்நான்கும் கடவுளென்று உரைப்பதற் குரியதாகாத மற்றைய அம்சத்தைக் குறிக்கின்றன.

கடவுளின் சித்தமும் பிரபஞ்சம் நடைபெறுகின்ற நிரந்தரவிதிகளும் ஒன்றேயாகி நிற்பனவாக ஸ்பைநோஸா கருதினரென முன்னமே கூறினோம். இதனின்று, நிகழ்வனவெல்லாம், அந் நிரந்திர விதிகளின் பிழையாத விளைவுகளேயன்றி மனம்போன போக்கெல்லாம் கேட்பாரின்றி உலகத்தை அலைத்தாளும் ஒரு வல்லரசின் காரியங்க ளல்லவென்பது புலப்படும். ஆதலின் கடவுள் இவ் வுலகத்தை எற்றுக்குப் படைத்து எற்றுக்கு இப்படி ஆட்டிவைக்கின்றார் என்பது போன்ற கேள்விகளை எழுப்பிக்கொள்வது நேரிதன்று. அவருடையநோக்கம் யாதோவென்று ஐயுற்று அலமரவேண்டா. கடவுளுக்கு ஒருவித நோக்கமும் இல்லாமலிருக்கலாமே. நாம் நம்முடைய காரியங்களைஎல்லாம் ஒருநோக்கம்பற்றியே செய்வதினின்று, உலகநிகழ்ச்சிகளுக்கெல்லாம் ஒரு நோக்கம் இருந்துதான் தீரவேண்டுமென்று கருதப்புகுவது பிழையாம். மனிதர் தமக்குரிய ஒழுக்கம் குணம் நோக்கம் முதலியவைகளைச் சார்த்தியே மற்றவைகளையும் மதிக்குமொரு பழக்கத்தில் மயங்கிக்கிடக்கின்றன ராகையால் தம்மைக்கொண்டு பிரபஞ்சத்தை அளப்பவர்களாகி, அதன் நடவடிக்கையின் நியதியை நிர்ணயிக்கமாட்டாமல் திகைக்கின்றனர். நம்முடைய மாநுட நோக்கங்களையும் அளவுகளையும் விருப்புவெறுப்புக்களையும், நமக்கு அயலான இப்பிரபஞ்சத்தினுள் வலிந்து புகுத்தி மதிக்கத் தலைப்படும் இம் மருட்கையே தத்துவஆராய்ச்சியுள் விளைகின்ற பெரிய பிழைகளுக்கெல்லாம் வித்தாகநிற்கின்றது. கடவுள் அளவில்ஆற்றலும் அருளும் உடையவொரு மெய்ச்நெறி நன்மையனுயின் உலகத்தில் இத்துணைத் தீமைகள் இருப்பது தகுமோ, என் [illegible] தீயவிவன் ஐயங்களால் கவல நேர்வதற்கு [illegible]ணம் இம்மருட்கையே. மானுடவாழ்க்கையில் தென்படுகின்ற துன்பங்களையும் தீமைகளையும் கண்டு மருண்ட சிலர் சிந்தைதிகைத்துக் கடவுளை மறப்பவராகின்றார். மற்றுஞ்சிலர், மனிதர் அறிந்தஇச்சிறுநன்மை தீமைகளுக்கு முற்றிலும் அப்பாலுக்குமப்பாலானவர் கடவுள்என்பதை மறந்து உலகத் தீமைகளையும் வாழ்க்கைத் துன்பங்களையும் கடவுளின் நன்மையோடு ஒற்றுமைப் படுத்தவேண்டி முயல்கின்றனர்—(இராமன் வாலியைக் கொன்றதன் நீதி இவ்வண்ணமே மாநுட மதிப்பைக் கடந்ததென்று கம்பர்பெருமான் கருதினரென ஸ்ரீமான் T. N. சேஷாசலஐயர் விரிவாகக்காட்டி வரைந்திருக்கின்ற கட்டுரைகள் இச்செவ்வியில் கருத்துட் கொள்வதற் குரியனவாம். 8வது வால்யூம், 12, 13, 14வது இதழ்கள்)—அவ்வாறு முயல்வதெல்லாம் வீண். நன்மையுந் தீமையும், மன்பதைத் தொகுதியையும் தனிமானுடத் தன்மையையுஞ் சார்ந்து அதன் நோக்கங்களுக்கும் இராகத்வேஷங்களுக்கும் ஒக்கத் தோன்றுமொரு தோற்றமே யல்லாமல், இன்றிருந்து நாளை மறைகின்ற விடயங்களால் நிரம்பிய பிரபஞ்சத்தில் சொல்லாதனவாம். இக்கருத்துக்களை ஸ்பைநோஸா பின்வருமாறு தெரிவித்திருக்கின்றனர்.

Whenever, then, anything in nature seems to us rediculous, absurd or evil, it is because we have but a partial knowledge of things, and are in the main ignorant of the order and coherence of nature as a whole, and because we want everything to be arranged according to the dictates of our own reason although in fact, what our reason pronounces bad is not bad as regards the order and laws of universal nature, but only as regards the laws of our own nature taken separately.........As for the terms *good* and *bad*, they indicate nothing positive considered in themsevles......For one and the same thing can at the same time be good, bad, and indifferent. For example, music is good to the melancholy, bad to mourners, and indifferent. to the dead. Bad and good are prejudices which the eternal reality cannot recognize. It is right that the world should illustrate the full nature of the infinite, and not merely the particular ideals of man...I would warn you that I do not attribute to nature either beauty or deformity, order or confusion. Only in relation to our imagination can things be called beautiful or ugly, well-ordered or confused. For example, if motion which the nerves receives by means of the eyes from objects before us is conducive of health, those objects are called beautiful; if it is not, those objects are called ugly.

ஸ்பைநோஸாவின் கடவுட்கொள்கை இத்தகையதாக, அவரது சமயநெறி இதற்கேற்றவாறு அமைந்திருக்கின்றது. இயற்கையினின்று வேறாகப்பிரித்தறியப் பழகாமல், அவரவர் தத்தம் தனித்தனி இச்சையைப் பிரபஞ்சத்தின் நிரந்தர விதிகளின் வரன்முறை ஒழுங்கினுடன் இரண்டறக் கலந்துவிடுவதே கடன் என்பார் இவர். நாம் தனித்தனியே இருந்து இயங்குகின்றோம் என்று எண்ணுவது பெரியதோர் மாயையாம். நமது மனம் பிரபஞ்ச இயற்கையுடன் இரண்டறக் கலந்து நிற்கின்றதென்னும் நினைவுதான் நன்மையுளெல்லாம் நன்மை. பாரஸீக ஞானவானுய உமார் கயாம் என்பவரைப்போல், "ஒன்றினை இரண்டென அழைப்ப[illegible]மோ" என வியக்கின்றார். "இன்னினும் மற்[illegible]லும் உளதாகிய ஒரே பிரம்மத்தை உணர்ந்து, முழுமையினின்று பாகங்களைப் பிரித்துப் பிரித்து அகற்றும் கனவு நீங்கி விழித்துக்கொள்" என்னும் இந்துமதக் கொள்கை ஸ்பைநோஸாவின் சிந்தனையைச் சார்ந்திருக்கின்றது. "நான் உயிரோடு இருக்கின்றேன்" என்றெண்ணி விவகரிக்கும் வழக்கத்தை விட்டு, நான் என்றும் இருப்பவன் ஆயினேன், என்னும்படி மாறுவாய்" என்னுமிது "தத்துவமஸி" ஆதிய மகாவாக்கியங்களை நினைப்பூட்டுகின்றது.



இறந்தபின்னும் இருப்பவர்கள் நாம். நம்முடைய மனத்தில் ஒவ்வொருபோது இந்த எண்ணம் மின்னல்போல் ஒரொளி வீசி மறைகின்றது. ஆசை அவாக்களாகிய இருண்ட மேகங்களைப் பீறிக்கொண்டுதோன்றுகின்றகடவுட் சோதியின் உருவமாம் இவ்வெண்ணம். மின்னலெனத் தோன்றும்முன் மறையாமல், கதிரவன்போல் இவ்வெண்ணம் நின்று ஒளிர்வதற்குரிய சாதனம் சீலமுடைய வாழ்க்கையாம். எனினும் சீலமுடையோர்க்கு ஓர்பேரானந்த நன்னிலையைக் கடவுள் பரிசாக அளிப்பார் என்று எண்ணி விவகரிப்பது செம்மைநினைவாம் பூண்ட நெறியோ ஆவதில்லை. சீலத்திற்குமோர் கைக்கூலி வேண்டுமோ, என்று கேட்கின்றார். "சீலமும் கடவுட் கைங்கரியமும் தாமே தமக்குப் பயன்களல்லவோ! வேறென்றும் வேண்டுமோ! அவைகளே நிரந்தர இன்பங்க ளல்லாவிடில் வீடுதான் வேறொன் றுண்டோ" என வைணவர்களைப்போல் ஸ்பைநோஸா விளம்புவார். எனினும் தமக்குத் தாமேபயன் என்றுரைக்கு மளவுகூடச் சீலத்தைப் பயனென்னும் சொல்லுடன் தொடர்புபடுத்தலாகாதென்று ஆங்கில நூலாசிரியர் ராபர்ட் லூயி ஸ்டீவன்ஸன் என்பவர் வற்புறுத்திய தூய மேன்மையை இவ் விதழ்களில் முன் ஓர் இடத்தில் வரைந்து விளக்கியிருக்கின்றோம்.

---

# தமிழ்ப் பாடம் 46.

## நள வெண்பா—கலிதொடர் காண்டம்

[887-வது பக்கத் தொடர்ச்சி]

அடையுங் கடுங்கானி லாடரவின் வாய்ப்பட்
டுடையுமுயிர் நாயகனே யோகோ—விடையெனக்குத்
தந்தருள்வா யென்னுந்தன் றாமரைக்கை கூப்பினாள்
செந்துவர்வாய் மென்மொழியா டேர்ந்து. 122.

பதப்பிரிவு:-அடையும் கடும் கானில் ஆடு அரவின் வாய்ப்பட்டு உடையும் உயிர் நாயகனே ஓகோ விடை எனக்கு தந்து அருள்வாய் என்னு தன் தாமரை கை கூப்பினாள் செம் துவர் வாய் மெல் மொழியாள் தேர்ந்து.

அன்வயம்:— செம் துவர்வாய் மெல்மொழியாள், தேர்ந்து, கடும் கானில் அடையும் ஆடு அரவின் வாய்ப்பட்டு நாயகனே, உயிர் உடையும். ஓகோ! எனக்கு விடை தந்து அருள்வாய்'' என்னுத் தன் தாமரைக் கை கூப்பினாள்.

பதவுரை.

செம் - சிவந்த
துவர் - பவளம்போன்ற
வாய் - வாயில்
மெல் - மெல்லிய
மொழியாள்-மொழிகளை இயம்புகின்ற தமயந்தி
தேர்ந்து - (இனித் தான் தப்புவதில்லை யென்பதை) உணர்ந்து,
"கடு - கடுமையாகிய
கானில் - காட்டில்
அடையும் - சேர்ந்த
ஆடு - ஆடுகின்ற
அரவின் - பாம்பின்
வாய் - வாயில்
பட்டு - அகப்பட்டு,
நாயகனே - தலைவா,
உயிர் - (எனது) உயிர்
உடையும் - (இனி) விண்டுபோகும்;
ஓகோ - ஐயோ
எனக்கு - எனக்கு
விடை - செலவு
தந்து - கொடுத்து
அருள்வாய் - அருள்வாய்,''
என்னு - என்று
தன் - தன்னுடைய
தாமரை - தாமரைமலர் போன்ற
கை - கைகளை
கூப்பினாள் - குவித்துக் கும்பிட்டாள்.

விரிவுரை:—நாயகனது கட்டளை இல்லாமல் ஒன்றும் செய்யப்படாது என்னும் கொள்கையள்போல், சாவதற்கும் அவன்பால் செலவு பெற்றுக்கொள்கின்றனள் தமயந்தி. பாம்பின் வாயில் பாதி உடல் முழுகநின்று தன் கொழுநன் அகன்ற திசைநோக்கிக் கும்பிடும் இப்பதிவிரதையை நினைத்தாலும் நற்கதி பெறலாம். ஆதலாற்றான் இப் பத்தினித்தெய்வம் போன்றவளது முகத்தை அடுத்தசெய்யுளில் புகழேந்திப்புலவர், 'தெய்வமுகம்' என்று அழைக்கின்றார். தங்கத்தைத் தீயிலிட்டால் அது மேன்மேலும் ஒளிர்வதைப் போல் தமயந்தியும் துன்பத்தால் தெய்வமென விளங்கலாயினாள்.

---

உண்டோ ரழுகுரலென் றொற்றி வருகின்ற
வெண்டோடன் செம்பங்கி வில்வேடன்—கண்டான்
கழுகுவாழ் கானகத்துக் காரரவின் வாயில்
முழுகுவா டெய்வ முகம். 123.

பதப்பிரிவு:—உண்டு ஓர் அழு குரல் என்று ஒற்றி வருகின்ற வெள் தோடன் செம் பங்கி வில் வேடன் கண்டான் கழுகு வாழ் கானகத்து கார் அரவின் வாயில் முழுகுவாள் தெய்வம் முகம்.

அன்வயம்:—ஓர் அழு குரல் உண்டு என்று ஒற்றி வருகின்ற வெள்தோடன் செம்பங்கி வில்வேடன், கழுகு வாழ் கானகத்து கார் அரவின் வாயில் முழுகுவாள் தெய்வ முகம், கண்டான்.

பதவுரை.

ஓர் - ஒரு
அழு - அழுகின்ற
குரல் - குரல்
உண்டு - உளது

என்று - என்று (உணர்ந்து)
ஒற்றி - அக் குரலைத் தொடர்ந்து
வருகின்ற - வருகின்றவனாகிய
வெள் - வெண் சங்கினாலாகிய
தோடன் - காதணிகளை அணிந்தவனும்
செம் - சிவந்த
பங்கி - தலைமயிரை உடையவனுமாகிய (ஒரு)
வில் - வில்லை ஏந்திய
வேடன் - வேடனானவன்,
கழுகு - கழுகுகள்
வாழ் - வசிக்கின்ற
கானகத்து - அந்தக் காட்டில்
கார் - கரிய
அரவின் - பாம்பினுடைய
வாயில் - வாயில்
முழுகுவாள் - அமிழ்கின்ற தமயந்தியின்
தெய்வ - தெய்வத்தன்மை பொலியும்
முகம் - முகத்தை
கண்டான் - பார்த்தான்.

---

வெய்ய வரவின் விடவாயி னுட்பட்டேன்
ஐயன்மீ ருங்கட் கபயம்யான்—உய்ய
அருளீரோ வென்னா வரற்றினா ளஞ்சி
இருளீரும் பூணா ளெடுத்து. 124.

பதப்பிரிவு:—வெய்ய அரவின் விடம் வாயின் உள் பட்டேன் ஐயன்மீர் உங்கட்கு அபயம் யான் உய்ய அருளீரோ என்னா அரற்றினாள் அஞ்சி இருள் ஈரும் பூணாள் எடுத்து.

பதவுரை.

இருள் - இருளை
ஈரும் - பிளக்கின்ற
பூணாள் - (பிரகாசம் பொருந்திய
ஆபரணங்களையுடைய தமயந்தி,
(அவ்வேடனைப் பார்த்து)
"வெய்ய - கொடிய
அரவின் - பாம்பின்
விடம் - விஷமுடைய்
வாயினுள் - வாயில்
பட்டேன் - அகப்பட்டேன்,
ஐயன்மீர் - எனது தமையன்மார் போல்வீரே,
யான் - நான்
உங்கட்கு - உங்களுக்கு
அபயம் - அடைக்கலம்,
உய்ய - யான் பிழைக்கும்படி
அருளீரோ - அருள்செய்ய மாட்டீரோ,"
என்னா - என்று
அஞ்சி - பயந்து
எடுத்து - வாய்விட்டு
அரற்றினாள் - கதறினாள்.

விரிவுரை:—இந்தச் செய்யுளில் 'அஞ்சி' என்னும் சொல் மற்ற வார்த்தைகளோடு பட்டதும் படாததுமாய் நிற்கின்றது. அதுபோலவே, வேடனைத் தமயந்தி வேண்டும்போது ஒரு அச்சம் அவள் மனத்தில் இடையே சிறிது தோன்றி இருத்தலுங்கூடும். செம்பங்கிச் சிலைவேடனுடைய தோற்றத்திலிருந்து, "பாம்பினால் சாகாமல் இவன் என்னைக் காத்தாலும் பின்னர் யாது செய்வானோ" என்று அஞ்சினாள்போதும் ஆதலாலோ, அவள் அவனை "என் தமையன் போன்றவனே" என்றழைத்தது! பின் நிகழ்ந்ததைப் பார்க்குங்கால் இவளுற்ற பயமும் பொய்க்கவில்லை. இவள்பால் அவ்வேடன் மிக்க மோகங்கொண்டான் என்பது இரண்டு பாசுரங்களுக்கப்பால் தெரியும். ஆயினும் தூய்மை வாய்ந்த தர்மசிந்தமுடைய ஒருத்தியும் தன்னைப் பார்த்த ஒருவன் மோகங்கொள்வான் என நினைக்கமாட்டாள். அது அவர்களுக்கு இயற்கையன்று. ஆதலால் அடாத பழிக்கு ஆளாகத் தன்னை அழைப்பான் அவன் என்று அஞ்சினாள் என நாம் மதிக்கப்படாது. பாலைநிலத்தில்சஞ்சரிக்கின்ற வேடர்கள் வழிபறிக்கும் தொழில் உடையவர்களாதலால் தான் அணிந்துள்ள ஆபரணங்களைக் கவர்தற்குத் தன்னை நலிவானோ என்று அஞ்சினாள் எனக் கொள்வதேமுறை. 'இருள் ஈரும்பூணாள்'' என்றும் அவள் இங்குக் குறிக்கப்பெற்றிருக்கின்றாள்.

---

சங்க நிதிபோற் றருசந் திரன்சுவர்க்கி [வெம்
வெங்கலிவாய் நின்றுலக மீட்டாற்போல்-மங்கையை
பாம்பின்வாய் நின்று பறித்தான் பகைகடிந்த
காம்பின்வாய் வில்வேடன் கண்டு. 125.

பொழிப்புரை:—பகையை வென்ற மூங்கிலினால் அமைந்த வில்லையுடைய அவ்வேடன் தமயந்தியின் நிலையைக்கண்டு, சங்கநிதிபோல் கேட்டவர்களுக்குக் கேட்டதைக் கொடுக்கின்ற சந்திரன்சுவர்க்கி, கொடிய கஷ்டத்திலிருந்து இவ்வுலகத்தவர்களைத் தன் கொடையால் மீளும்படி செய்ததுபோலத் தமயந்தியைப் பாம்பினுடைய வாயிலிருந்து பறித்தான்.

விரிவுரை:—புகழேந்திப்புலவரை ஆதரித்த வள்ளல் மள்ளுவநாட்டு அரசனாகிய சந்திரன்சுவர்க்கி என்பதையும், அவனை இப்புலவர் பாராட்டுகின்ற பெருமையையும் முன்னரே கூறியிருக்கின்றோம். (6வது செய்யுள். 44வது பக்கம்) இவைகளைத் தொகுத்து அவைகளின் தன்மையையும் விளக்கி ஸ்ரீமான். டி. யன் சேஷாசல ஐயர்தம் கம்பராமாயணக் கட்டுரையில் முன் (1 வது வால்யூம் 812வது பக்கத்தில்) வரைந்திருப்பவைகளை எடுத்துப் பார்த்துக்கொள்வது நலம். அடைமொழி ஒன்றும் வேண்டாவழி வருவிக்காமல் கதைக்கொட்டித் தம் வள்ளலாரைத் தொழிலின் தன்மையால் உவமையாக்கிப் பாராட்டுவதே சிறந்ததென்று அவர் அங்குக் கூறியுள்ளார்

குறிப்பு:—'காம்பின் வாய் வில்,' என்பது 'காம்பினால் வாய்ந்த வில்' என விரியும். ஆதலின் காம்பின், என்பது மூன்றும் வேற்றுமை. ஆல் ஆன் ஒடு ஓடு என்பவைகள் மூன்றும் வேற்றுமை உருபுகள். காம்பின் என்பதில் அவ்வுருபு ஒன்றும் இல்லாததால் அது மூன்றும் வேற்றுமைத் தொகை. காம்பு + இன் = காம்பின் என்று ஆனதில் இன் என்றது உருபன்று. அது சாரியை. உருபுகளைச் சொல்லோடு சேர்த்துவைப்பதற்குச் சில சமயங்களில் நடுவே வருகின்ற இடைச்சொற்களுக்குச் சாரியை என்பது பெயர் என முன் (687-வது பக்கம்) காட்டி இருக்கின்றோம். காம்பு + இன் + ஆல் = காம்பினால் என்று இருக்க வேண்டிய இது, பெயர்ச்சொல்லும் சாரியையும் மாத்திரம் நின்று உருபு மறைந்து 'காம்பின்' என வந்திருக்கின்றது.



மூன்றும் வேற்றுமை, பெயர்ச்சொல்லை மூன்று விதப் பொருள்களாக மாற்றுவதற்கு வரும். அவை, கருவி கர்த்தா உடனிகழ்ச்சி என்பன (703-வது பக்கம்.) இனி, கருவிப் பொருள், முதற்கருவி துணைக் கருவி என இரண்டு பிரிவுகளை உடையது. அவ்வாறே கர்த்தாப்பொருளும், ஏவுதற்கர்த்தா இயற்றுதற் கர்த்தா, என இருவகைப்படும். கருவி என்பது ஒன்றைச் செய்வதற்கு வேண்டியிருப்பது. செய்யப்படும் பொருள் குடமானால் அதைச்செய்வதற்கு முதலில் மண் என்னும் வஸ்துவேண்டும். ஆனால் மண்மாத்திரம் இருந்தால் போதாது. சக்கரம் வனைதடி முதலிய சாதனங்களும் வேண்டும். இவ்விதம் செய்யப்படும் ஒருபொருளுக்கு முதல்வஸ்துவாக இருக்குமொன்றை முதற்கருவி என்றும், சாதனங்களாக இருப்பனவற்றைத் துணைக்கருவி என்றும் அழைப்பர். 'தச்சன் மரத்தினால் பெட்டியைச்செய்தான்,' என்னும் உதாரணத்தில் பெட்டிக்கு முதற்கருவியா யிருப்பது மரம். அதனைக் காட்ட 'ஆல்' என்னும் மூன்றும் வேற்றுமை உருபு அதனோடு சேர்ந்திருக்கின்றது. எனவே, இது மூன்றும் வேற்றுமை முதற்கருவிப் பொருள். இப்படியே "இது கல்லால் செய்த சிலை" என்னும்போதும் கல்லால், என்பது, மூன்றும் வேற்றுமை முதற்கருவிப் பொருளில் நிற்கின்றது. அவ்வாறின்றி, "உளியால் செய்த பெட்டி, 'வாளால் அறுத்த மரம்,' என்னும் வாக்கியங்களில், உளியும் வாளும் பெட்டியைச் செய்வதற்கும் மரத்தை அறுப்பதற்கும் மூலமாயில்லாமல் உதவியாக மாத்திரம் இருப்பதால், மூன்றும் வேற்றுமை உருபுகள் வந்து அவைகளைத் துணைக்கருவிப் பொருள் படும்படி செய்தன.

"காம்பின் வாய் வில்', என்று இந்தச் செய்யுளில் வந்திருப்பதில், காம்பு என்னும் பெயர்ச்சொல்லால் குறிக்கப்படும் மூங்கில், வில்லைச் செய்வதற்கு மூலவஸ்துவாயிருப்பதால் அது முதற்கருவிப் பொருளில் நிற்கின்றது. இப்பொருளில் இருப்பதால், ஆல் ஆன் என்னும் உருபுகள் வெளிப்படையாகத் தோன்றாமற்போனாலும் அச்சொல் மூன்றும்வேற்றுமையைப் பெற்றிருக்கின்றதென்று கொள்ளவேண்டும். முதற்கருவி துணைக்கருவி என்று கூறப்படும் இதனையே, முதற்காரணம் துணைக்காரணம் என்றும் கூறலாம்.

"இக்கோயில் தச்சனால் கட்டப்பட்டது," என்பதற்கும், "இக்கோயில் அரசனால் கட்டப்பட்டது" என்பதற்கும் உள்ள வித்தியாசம் வெளிப்படை. தச்சனும் அரசனும் கோயிலுக்கு முதற்கருவியு மல்லர் துணைக்கருவியு மல்லர். கல் முதலியன முதற் கருவி, உளிமுதலியன துணைக்கருவி. ஆகையால் அரசன் தச்சன் என்பவர் கல்முதலிய முதற்கருவிகளையும் உளி முதலிய துணைக்கருவிகளையும் கொண்டு, கோயிலாகிய பொருளைச் செய்தவர். அவ்வாறு அவர்கள் கர்த்தா ஆவதை, ஆல்என்னும்உருபு சேர்ந்து காட்டுவதால் இங்கு அது மூன்றும் வேற்றுமை, கர்த்தாப் பொருளில் வந்திருக்கின்றது. இனி, கோயிலைக் கட்டுவதில் அரசன் கட்டுவதற்கும் தச்சன் கட்டுவதற்கும் வேறுபாடு உண்டு. தச்சன் தானே தன் கைகளால் கட்டுவான். அரசன் மற்றவர்களைக்கொண்டு கட்டுவிப்பான். இயற்றுபவன் தச்சன், இயற்றும்படி ஏவுபவன் அரசன்; ஆதலால் அரசனை ஏவுதற்கர்த்தா வென்றும், தச்சனை இயற்றுதற் கர்த்தா வென்றும் அழைப்பர்.

---

# நம்மாழ்வார் வைபவம்

## திருவாய்மொழி

[884-வது பக்கத் தொடர்ச்சி]

4-ம் பத்து, 2-ம் தசகம்.
1-ம் பாசுரம்.

பாலனா யேழுல குண்டு பரிவின்றி
யாலிலை யன்னவசஞ் செய்யு மண்ணலார்
தாளிணை மேலணி தண்ணந் துழாயென்றே
மாலுமால் வல்வினை யேன்மட வல்லியே.

அவதாரிகை:—முன்சென்ற, "ஒருநாயகம்" என்கிற தசகத்தில், ஐசுவரியம், கேவலாத்மதரிசனம், ஆகிய இவை உலகத்தாரால் ஸ்திரமாய் அநுபவிக்கக்கூடியவைக ளல்லவென்றும்; அவைகளை விட்டு எம்பெருமான் ஒருவனையே பரமப்பிராப்பியமாகப் பற்றுங்கோளென்றும்உபதேசித்தார். இப்பெரியார்உபதேசத்தை உலகத்தார் அநுசரிக்காமல் தாம் தாம் தம் பூர்வகர்மங்களுக்கேற்ப அவரவர்இஷ்டப்படி நடப்பதைக் கண்டு இவர்களுக்கு இனி உபதேசம் செய்வதில் பயனில்லையென்று தீர்மானித்தார். ஆகவே ஆழ்வாருக்கு, எம்பெருமானோடு ஸர்வ கரணங்களாலும் கலக்கவேண்டுமென்று "முடியானே' என்னும் அந்தத் தசகத்தில் பிறந்த ஆசையானது தூண்ட, அவனது ஒவ்வொரு அவதாரத்திலும் காலதேச வர்த்தமானத்துக் கேற்ப அவனுடன் நின்று அந்த அந்தச் சமயங்களில் அவனுக்குத் தாவிய பணிவிடைகள் செய்யவேண்டும் என்ற விருப்பம் மேன்மேலும் வளரவும் இப்பெரியாரின்மனம் தத்தளித்து நின்றநிலையில் எம்பெருமானை உடனே காணவேண்டுமென்ற அவா அவரை நிரம்ப வற்புறுத்தியது. இப்பெரியார் ஒன்றும் சொல்லவும் நடத்தவும் இயலாதபடிநிற்கும்நிலையை இவரது அரும் பெருந் தோழர்கள் கண்டு ஆற்றாதவர்களாய் வியஸநப் படுகிறபடியை, எம்பெருமானை ஆசைப்பட்டுப் பெறாமல் நோவுபடுகின்ற ஒருபிராட்டியினுடைய திருத் தாயார் பேச்சினாலே எம்பெருமானுக்குவிண்ணப்பம்செய்கின்றவகையில் இந்தத் தசகத்தின் பாசுரங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அடுத்த தசகத்தின் அவதாரிகையில், இந்தச்சந்தர்ப்பத்தின் துவக்கத்தையும் அது எவ்வண்ணம் நிறைவேறி ஆழ்வார்தம் மனதின் தாபத்தைத் தீர்த்ததென்பதையும் பரக்க விசாரிப்போம்.

பொழிப்புரை;—"எம்பெருமான் ஒரு பிள்ளையாகி அப் பிள்ளைத்தனத்தாலே முன்பு, காணப்படுகிற இந்த ஏழுலகங்களையும் உண்டு அதனாலே ஒரு தீங்கும் தனக்கு விளையாதபடி ஆல இலையிலே யுகப்பிரளயத்தின் முடிவில் கண்வளர்ந்தருளினபோது அவன் திருவடிகளிலே யணிந்திருந்த திருத்துழாயை இக்காலத்திலே பெறவேணுமென்று ஆசைப்பட்டு நிற்கின்றாள். இப்படி ஸர்வ சக்தனை எம்பெருமானும் [illegible]

திக்கவொண்ணுத வொன்றை இவள் ஆசைப்படுவது என்னுடைய பாவமல்லவோ வென்று இவளுடைய திருத்தாயார் அரற்றுகின்ருள்.

பதக்குறிப்புக்கள்:-மடவல்லி-தான் சார்ந்தமரத்தை விடமுடியாத கொடி - அதாவது தான்பற்றிய ஆசையை விடாத பிடிவாதமுள்ள பெண். அன்னவசஞ் செய்யும்-உண்டசோற்றை ஜீர்ணிக்கும்பொருட்டுக் கிடந்து உறங்கும். தண்ணந் துழாய்-அதிசீதளமான வடபத்திரசாயியின் திருவடியில் அலங்காரமாக அணியப் பெற்றிருந்த துழாயைத்தவிர மற்றச் சமயத்தில் எம்பெருமான் அணியும் துழாய் அவளுக்கு வேண்டாமை குறிப்பிடுகைக்காக, "தண்ணம்" துழாய் என்று கூறுகின்ருள்.

---

### 2-ம் பாசுரம்.

வல்லிசேர் நுண்ணிடை யாய்ச்சியர் தம்மொடுங்
கொல்லைமை செய்து குரவை பிணைந்தவர்
நல்லடி மேலணி நாறுதுழா யென்றே
சொல்லுமாற் சூழ்வினை யாட்டியேன் பாவையே.

பதக்குறிப்புக்கள் :—சூழ்வினையாட்டியேன் - பூர்வ ஜந்மத்தின் வினைகளின் பயனை விதியில் அகப்பட்டுப் பாவத்தை யனுபவிக்கின்ற யான்; குரவை - ராஸக்கிரீடைகள் - கிருஷ்ணபகவான் ஆய்ச்சியரோடு கூடி மண்டலமிட்டு ஆடிய ஓர்வகைக் கூத்து. பாவையே - பாவைபோன்றவளாகியஎன்பெண். வல்லிசேர்-கொடி போன்ற, நுண்ணிடை - சூக்ஷ்மமான இடைபொருந்திய. கொல்லைமைசெய்து-ஸ்ரீ கிருஷ்ணபகவான் தன் ஸௌந்திரியத்தாலும் கிருத்திரமமான சேஷ்டைகளாலும், கண் ஜாடைகளாலும் ஆய்ச்சியரை மோஹிப்பித்து, மரியாதைமட்டு எல்லாம் தொலைந்துபோகும் படி (கொல்லைமை) தன்வசப்படுத்தி.

பொழிப்புரை:—"தன்னுடைய ஸௌந்தரிய முதலாய குணங்களின் கவர்ச்சியாலே திருவாய்ப்பாடியில் பெண்பிள்ளைகளை வாயடித்துத் தன் திருவடிகளிலே வந்து விழும்படி வசீகரித்து அவர்களோடு திருக்குரவை சேர்ந்தருளின வண்துவரைப் பெருமானுடைய அழகிய திருவடிகளிலே யணிந்த நாறுந்துழாயை என் பேதை ஆசைப்படுகின்ருள்.

---

### 3-ம் பாசுரம்.

பாவியல் வேத நன்மாலை பலகொண்டு
தேவர்கள் மாமுனிவ ரிறைஞ்ச நின்ற
சேவடி மேலணி செம்பொன் றுழாயென்றே
கூவுமாற் கோள்வினை யாட்டியேன் கோதையே.

அவதாரிகை:-இப்பாசுரத்தில், தேவர்களும் மஹாமுனிவர்களும்வேத ரிக்குக்கள் கொண்டு துதிசெய்வதாகப் பிரஸ்தாபிக்கின்றபடியால் பாற்கடலில் பள்ளி கொண்ட எம்பெருமானைத் துளவத்தால் அர்ச்சித்துப் பூஜை செய்யும் ஸந்தர்ப்பத்தை எடுத்துக்காட்டுகின்றபடி.

பதக்குறிப்புக்கள்:— கோதை - மாலை - அதாவது மாலையை அணிந்த பெண். கோள்வினை - பலமாகப் பிடிக்கும் வினை, பூர்வஜந்மப் பயன். பாவியல்-பாக்களால்சேர்ந்த. வேத நன்மாலை-வேதரிக்குக்கள் - "அதிமங்களமாய் அநேகங்களாகத் தொடுக்கப்பட்ட நல்ல வெண்பாக்களால் தொடர்ந்து ஒன்றுசேர்த்த வேத வாக்கியங்களாகிற மாலைகொண்டு பிரமனும் ஸநகாதி முனிவர்களும் இறைஞ்சும்படி தன்னைக் கொடுத்துக்கொண்டு பாற்கடல்சேர்ந்த பரமனுடைய அழகிய திருவடிகளிலே யணிந்த செம்பொன்போன்ற துழாய் என்று இவள் கூப்பிடாநிற்கிறுள்" - ஆருயிரப்படி.

---

### 4-ம் பாசுரம்.

கோதி லவன்புகழ் கொண்டு சமயிகள்
பேதங்கள் சொல்லிப் பிதற்றும் பிரான்பரன்
பாதங்கள் மேலணி பைம்பொற் றுழாயென்றே
யோதுமா லூழ்வினை யேன்தடந் தோளியே.

பதக்குறிப்புக்கள்:—சமயிகள்-தர்க்கிக்கும் வல்லமையாலே சித்தாந்தங்கள் செய்து உறுதிகொள்பவர்கள். கோதில் அவன் புகழ் கொண்டு—கோதில்-மாசில்லாத அதாவது அல்பகுணங்களும், நிந்திக்கக்கூடிய குணங்களும், கலப்பில்லாதவனுடைய பிரசித்தமான கல்லியாண குணங்களை ஆதாரமாகக் கொண்டு, பேதங்கள் சொல்லி - தான் உதாஹரிக்கும் ஒரு குணத்துக்கும் எதிரி தர்க்க முறையாய் வாதிக்கும் மற்றொரு குணத்திற்கும் வாசி கூறி, பிதற்றும் - எதிர்வாது கூறும் பயனைத் தன் சித்தாந்த புத்தியால் பாராட்டாமல் தன் வாதத்தையே கிரமமின்றிக் கடைபிடித்துப்பரஸ்பரம் எதிரியின்நியாயத்வைதக் காணவல்லாதாராய்நிற்கும்பக்தர்களுடைய, பிரான்-பிரபு, பரன்-பரமன், பாதங்கள் மேல்-திருப்பாதங்களில், அணி-அணிந்திருந்த, பைம்பொன் துழாய்-என்றும் எப்போழ்தும் வாடாத துளவங்களே, என்றே - துளவம், துளவம் என்றே இப்பதத்தை அங்வபஞ்செய்து வேறு உதவிப்பதயில்லாமல், ஓதும்-மந்திரம்போல் ஜபிக்கின்ருள், ஊழ்வினையேன் - ஊழ்வசத்தி லகப்பட்ட என் - தடந்தோளியே - விசாலமான தோள்களையுடைய பெண்.

குறிப்பு:—இப்பாசுரத்தில் தன் வியஸநத்தை வாய்விட்டுச் சொல்லாமல், "துளசி துளசி" என்று ஒரே பதத்தை மந்திரம்போல் ஓதுகின்ருளென்று இப்பிராட்டியின் திருத்தாயார்சொல்லுகிருள். பகவானுடைய கல்லியாண குணங்களில் ஒன்று மற்றொன்றின் தாரதம்யத்தைப்பற்றிய தர்க்கம் வைகுண்டத்தில் பக்தர்கள் கோஷ்டியில் நடந்துவருவதாக ஆழ்வார் திருவுள்ளப்படுகிருர்.

---

### 5-ம் பாசுரம்.

தோளிசேர் பின்னைபொருட் டெருதேழ் தழீஇக்
கோளியார் கோவல னார்குடக் கூத்தனார்
தாளிணை மேலணி தண்ணந்துழா யென்றே
நாளுநாள் நைகின்ற தாலென்றன் மாதரே.

பதவுரை:—என்தன்-என்னுடைய, மாதரே - இப்பெண்ணனவள், தோளிசேர் பின்னை-தோளி-அழகிய தோளையுடைய,சேர்-ஸ்ரீகிருஷ்ணபகவானுக்குத் தகுதியான, பின்னை - நல்பின்னை பிராட்டிபொருட்டு, ஏழெருது-ஏழு காளைகளை, தழீஇக் கோளியார் - தழுவிக்கொள்பவர் - அதாவது பிடித்து அடர்த்து ஜயித்துக் கொள்பவர். குடக்கூத்தனார்-குடத்தை எடுத்துத்தாளமிட்டு ஆடும் ஓர்வகைக்கூத்தில் சிறந்தவர்.கோவலனார்-இடையரான ஸ்ரீ கிருஷ்ணனுடைய, தாளிணைமேல் - திருப்பாதங்கள் மேல், அணி - அணிந்த; தண்மை துழாயென்றே-குளிர்ந்த துளசி தனக்கு வேண்டுமென்றே, நாளும் நாள் - நாள்தோறும், நைகின்றது - மன வருத்தப்படுகிருள்.

குறிப்பு:—இப்பாசுரத்தில், தினந்தோறும் ஸ்ரீ கிருஷ்ணபகவான் தன் பாதங்களில் அணிந்துகொள்ளும் திருத்துழாயென்றே, அது ஆசைப்பட்டுக் கிடைக்காதென்று தெரிந்திருந்தும், இப்பிராட்டி வியசனப்படுகிருள் என்கிருர்.



# அப்பர்

## அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்—29. தருக்கம்

[849-வது பக்கத் தொடர்ச்சி]

### 13. ஏத்துவாபாசம். (Fallacy)

ஏத்துவாபாசம் என்னும் இத்தொடர் ஆபாசமான ஏது என்று பொருள்தரும். அநுமானப் பிரமாணத்தை முன்னே கூறிய இடத்து, பக்கதரும முதலான ரூபங்களில் ஒரு ரூபத்திற் குறைவிருப்பினும், அது ஏது ஆகாது என்பதைக் கண்டோம். அது சிலரூபங்களோடு கூடுவதால் ஏதுவைப்போல் காணப்படலாம்; அதனாலதற்கு ஏதுப்போலி யென்னும் பெயரைத் தர்க்கநூல்களில் தந்தனரென்பதை விரித்தோம். வாதங்களைப்பற்றிக் கூறுமிடத்திலும் ஐவகை ஏதுப்போலிகளைக் கூறினேம். (அவை ஏத்துவாபாச பஞ்சகம் எனப்படும்). அவற்றை, பக்கதரும ஞான அபாவம் என்று கூறுவர்.

ஏத்துவாபாசமானது-அசித்தம், விருத்தம், அநைகாந்திகம், பிரகரண சமம், காலாத்தியயாபதிட்டம் என ஐவகைப்படுமென்று முன்னரே கண்டோம். அசித்தம், மூன்று வகை—ஆசிரயாசித்தம், சொரூபாசித்தம், வியாப்பியத்துவாசித்தம்,என்பன. அவற்றுள் ஆசிரயாசித்தம் "ஆகாயத்தாமரைப்பூமணமுடையது" என்பதுபோல்வன. சொரூபாசித்தத்தை —விசேடணசித்தம், விசேடியாசித்தம், அசமர்த்த விசேடணசித்தம், அசமர்த்த விசேடியாசித்தம் என நான்குவகையில் கொள்வர்.

விருத்த மென்பது சாத்திய விபரீதத்தோடு கலந்த ஏது. அநைகாந்திகமாவது சாத்தியசம்சய ஏது. பிரகரணசம மாவது (argument that cuts both ways). எதற்குப் பிரதிபக்ஷமான வேருகும் ஒருஏதுவுண்டோ அது பிரகரணசமமெனப்படும். காலாத்தியயாபதிட்டம் என்பதற்கு, காலத்தில் பொருந்தாமல் அகாலத்தில் தோன்றுவதென்பது பொருள். இப்போலி வாதங்களுக்கு,அப்பர் தேவாரமாயினும், இன்னும்வேறு திருமுறைகளாயினும் உதாரணமாயமைந்த செய்யுள்களைப் பெற்றில. ஆயினும், நமதுசமயகுரவர் தங்களைத் தூஷித்துக்கொண்டு இறைவனது திருவருளைப் புகழுங்காலத்தில் ஏத்துவாபாச உருவத்தில்தம்மை இகழ்ந்து கூறுவதுண்டு. ஆயினும்அவற்றை உண்மையில் நமது சமயகுரவர்கள்பெற்றிருந்த தோஷமே யென எண்ண இடமில்லை. அவற்றுள் சிலவற்றை இங்குக் கவனிப்போம்:— A. அசித்தம்.

(I) ஆசிரயாசித்தம்:—(The fallacy of Non-extent Locality)

கொள்ளேன் புரந்தரன் மாலயன்
வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல்
லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே
யிருக்கப் பெறினிறைவா
உள்ளேன் பிறதெய்வ முன்னையல்
லாதெங்க ளுத்தமனே.

திருவாசகம்.

சிவனடியார் நரகம் புகுவதென்பதும், புகுந்தாலும் எள்ளாரென்பதும் ஆகாயத்தாமரையின் மணத்தைப் பற்றிப் பேசியவாறே. இதில் நரகவாழ்க்கை ஆசிரயமாம். ஆசிரயம், அதாவது அபக்ஷத்தினுடைய காரியத்துவஏது இங்குக் குறிப்பிடப்பட்டது.

(II) சொரூபாசித்தம்—[Fallacy where the nature alleged does not really reside in the subject.]

(i) விசேடணசித்தம்

தொண்டனேன்பட்டதென்னே தூயகாவிரியினன்னீர்
கொண்டிருக் கோதியாட்டிக் குங்குமக் குழம்பு சாத்தி
இண்டைகொண் டேற நோக்கி யீசனை எம்பி ரானைக்
கண்டனைக் கண்டி ராதே காலத்தைக் கழித்த வாறே.

தனித்திருநேரிசை 1.

நீரும் பூவும் தூபமும், தமிழோடு இசை பாடலும் மறந்தறியாதார் ஒருவர் திருவாக்கு இதுவென்னில், அவர் தற்பழிப்பு ஒருவகைச் சொரூபாசித்தமாகும்.

(ii) விசேடியாசித்தம்

உற்ற வர்தம் முறுநோய் களைபவர்
பெற்ற மேறும் பிறங்கு சடையினர்
சுற்றும் பாய்புனல் சூழ்திரு வீரட்டம்
கற்கி லல்லதென் கண்டுயில் கொள்ளுமே.

திருவதிகைவீரட்டானம் - திருக்குறுந்தொகை 3.

கற்பது கண்டுயில்வதற்கு என்னும் இது விசேடியாசித்தம்.

(iii) அசமர்த்த விசேடணசித்தம்

இதற்குத் தர்க்கநூல் கூறும் உதாரணம்-"சத்தம் நித்தியம், குணத்துவ முடையதாய்க் காரணாபாவத்தையுடைமையால்" என்னும் வாக்கியம். இத்தகைய உதாரணங்கள் மாணவர்களுக்கு மருட்சி தருவதன்றி யாதொன்றுக்கும் பயன்படா. நமது இலக்கியத்தில், சொரூபாசித்த நடையில் பல செய்யுள்கள் பாடப்பட்டிருக்கின்றன. அவற்றைக் காணுமிடத்து நமது கவிவாணர் தர்க்கக்கலையைப் பயன்படுத்திய அழகு நன்கு விளங்கும். அவற்றுள் திருச்சிற்றம்பலக் கோவையாரில் பல உதாரணங்கள் காணலாம். அசமர்த்த விசேடணசித்தம்தோன்ற, பின்வரும் செய்யுள்,நாமுகனிடத்துப் பிறப்பதுபோல் பாடப்பெற்றிருப்பது காண்க:—

இரத முடைய நடமாட் டுடையவ ரெம்முடையர்
வாத முடைய வணிதில்லையன்னவரிப்புனத்தார் [றேல்
விரத முடையர் விருந்தொடுபேச்சின்மை மீட்டதன்
சரத முடையர் மணிவாய் திறக்கிற் சலக்கென்பவே

மதியுடம்படுத்தல் 57.

இது "மொழிபெறுது கூறல்" என்னும் ஒரு களவியல் துறையாகும். "தேமொழியவர் வாய்மொழிபெருது, மட்டவிழ் தாரோன் கட்டுரைத்தது" என்பர். இத்தொடர்மொழி யடுக்குக்கள் சொரூபாசித்த வகையிற் காணப்படினும், அவற்ருல் இச் செய்யுள் அணி சிறந்து விளங்குவது காண்க. மற்றும், அப்பரும் அவ்வாறே.

உன்மத் தகமலர் சூடி யுலகந் தொழச்சுடலைப்
பன்மத்தகங்கொண்டுபல்கடைதோறும் பலிதிரிவான்

என்மத் தகத்தே யிரவும் பகலும் பிரிவரியான்
தன்மத் தகத்தோ ரிளம்பிறை சூடிய சங்கரனே

தனித்திருவிருத்தம் 6.

என்று பாடுவது காண்க. விசேடணமாகக் காட்டப்பட்டன சமர்த்தம் அல்லது வலிவுபெற்றவை யல்ல. ஆயினும் அவற்றின் அசமர்த்தத்தாலே செய்யுள் பொலிவுபெறுவது காண்க.

(iv) அசமர்த்த விசேடியாசித்தம்

இதற்கு, பெரும்பாலும் மணிவாசகப் பெருமான் தன்னை இழித்துக் கூறுகின்ற அற்புதப்பத்தின் சில தொடர்மொழிகளை உதாரணமாகக் காட்டலாம். பிறவிப் பெருந்துயரி லழுந்தி நடலைச் செய்கைகளில் சிறப்புற்ற நாயேற்குச் சிவபெருமான் இணையடி தந்தாரென்று கூறுவது அசமர்த்த விசேடியாசித்த உருவகமாகும்.

பொச்சை யானவிப் பிறவியிற் கிடந்துநான்
புழுத்தலை நாய்போல
இச்சை யாயின வேழையர்க் கேசெய்தங்
கிணங்கியே திரிவேனை
இச்ச கத்தரி யயனுமெட் டாததன்
விரைமலர்க் கழல்காட்டி
அச்ச னென்னையு மாண்டுகொண் டருளிய
வற்புத மறியேனே.

அற்புதப்பத்து 9.

இதில் விசேடியம் தன் பக்கத்தில் அசமர்த்த ஏதுவைப் பெற்றிருப்பதால் அவ்வேது அசமர்த்த விசேடியாசித்தம். விரைமலர்க்கழல் சாதிக்கவந்த ஹேது இச்சையாயின ஏழையர்க்குச் செய்து இணங்கித்திரிதல் என்று காட்டுவதுபோல் உருவகப்படுத்திய இந்தத் தொடர்நிலை சொரூபாசித்த உருவகம் ஆகும். இத்தகைய ஏதுப்போலிகளை இவ்வாறு நமது சமயகுரவர் பயன்படுத்துவது செய்யுளுக்குச் சிறப்பாயதோர் அலங்காரமாய் விளங்கும்.

(III) வியாப்பியத்துவாசித்தம்:—இது இருவகையென்று முன்னரே கண்டோம். அவற்றுள் ஒன்று, வியாத்தியை அறிவதாகிய பிரமாணமில்லாதது. அதாவது சாத்தியத்தோடு உடனிகழ்ச்சிச் சம்பந்தமில்லாதது:—

வெறுப்பன வேசெய்யு மென்சிறு
மையைநின் பெருமையினாற்
பொறுப்பவ னேயராப் பூண்பவ
னேபொங்கு கங்கைசடைச்
செறுப்பவ னேநின் திருவரு
ளாலென் பிறவியைவேர்
அறுப்பவ னேயுடை யாயடி
யேனுன் னடைக்கலமே.

அடைக்கலப்பத்து 2.

பெருமைக்குப் பொறுத்தல் உடனிகழ்ச்சி யன்று, பொறுத்தலுக்குப் பெருமை யுடனிகழ்ச்சியாகாது. ஆயினும் இங்குப் பெருமையும்பொறுத்தலும் பொருந்தும்.

இரண்டாம் வகை வியாப்பியத்துவாசித்தமாவது, உபாதியோடு கூடிய சாத்தியசம்பந்தம் உடையது. மைத்திரி மகன் கரியன் என்பது மைத்திரியின் மகனுதலால் இவன் கரியன் என்பது மைத்திரியின் மகன்மையால் கருமை சாதிக்கப்படுதலின், இவ்வேது (உபாதி சம்பந்தத்தால் வியாப்தி பெறுமையின்) வியாப்பியத்துவாசித்தம். ஆயினும் கவிவாணர் வியாப்பியத்துவாசித்த வுருவத்தில் அரிய பாடல்கள் பாடுவர்.

தண்காட்டாச் சந்தனமுந் தவள நீறுந்
தழையணுகுங் குறுங்கொன்றை மாலைசூடிக்
கண்காட்டாக் கருவரைபோ லனைய காஞ்சிக்
கார்மயிலஞ் சாயலார் கலந்து காண
எண்காட்டாக் காடங் கிடமா நின்று
எரிவீசி யிரவாடு மிறைவர் மேய
வெண்காடே வெண்காடே யென்பீ ராகில்
வீடாத வல்வினைநோய் வீட்ட லாமே.

பலவகைத் திருத்தாண்டகம். 9.

B. விருத்தம் (Incompatibility):—

இது, சிவபெருமான் திருவிளையாடல்களை உற்றுநோக்கின், அவர் கருத்தறியாமல் கலங்கும் ஒருவனுக்குப் புலப்படுவதுமாம் உலகவாழ்க்கையில் நமது அநுபவத்திற்கும் நமது யுக்திக்கும் விரோதமாகக் காணப்படும் இரண்டுபொருள்களை ஒன்றாய்க் கூட்டிக் காண்பது விருத்தமாகும்.

காற்றாகிக் கார்முகிலாய்க் கால மூன்றாய்க்
கனவாகி நனவாகிக் கங்கு லாகிக்
கூற்றாகிக் கூற்றுதைத்த கொல்களிறு மாகிக்
குரைகடலாய்க் குரைகடற்கோர் கோமா [னுமாய்
நீற்றானாய் நீறேற்ற மேனி யாகி
நீள்விசும்பாய் நீள்விசும்பி னுச்சி யாகி
ஏற்றானா யேறூர்ந்த செல்வ னாகி
யெழுஞ்சுடரா யெம்மடிக ணின்ற வாறே.

நின்ற திருத்தாண்டகம் 4.

C. அநைகாந்திகம்

விண்ணிறந் தார்நிலம் விண்டவ
ரென்றுமிக் காரிருவர்
கண்ணிறந் தார்தில்லை யம்பலத்
தார்கழுக் குன்றில்நின்று
தண்ணறுந் தாதிவர் சந்தனச்
சோலைப்பந் தாடுகின்றார்
எண்ணிறந் தாரவர் யார்கண்ண
தோமன்ன நின்னருளே

திருக்கோவையார்.

இது, பக்க, விபக்க, சபக்க விருத்தியாம் ஏதுவை எடுத்துக்காட்டுஞ் செய்யுள். ஆயினும் முன்னர்க் கூறியவாறு செய்யுளணிக்குப் பயன்படுத்தப்பட்டதன்றி இது தர்க்கதோஷங்களை அறியாமையால் வந்ததன்று என்று அறிக.

D. பிரகரணசமம்:—இதற்குத் தர்க்கநூல் காட்டும் உதாரணம்—சத்தம் அநித்தியம், நித்தியதருமம் தோன்றாமையால்-என்பதும், "சத்தம்நித்தியம் அநித்திய தருமம் தோன்றாமையால்" என்பதும் ஆம். இருவர் புரியும் (Subcontrary opposition) வாதம் இவ்விதம் முறையே அமையுமாயின், இதைப் பிரகரணசமமென்பர். இது ஆங்கிலத்தர்க்கத்தில் Invalid data of inference என்று கூறப்படும். இதைத் தாயுமானவர் பின்வரும் செய்யுளில் மிகவும் அழகாக வர்ணிப்பது காண்க:—

எக்கால முந்தனக் கென்னவொரு செயலிலா
ஏழைநீ யென்றி ருந்திட் [கை
டெனதறிவி யுடல்பொருளும் மௌனியாய் வந்துன்
ஏற்றுக்ம தென்ற வன்றே



பொய்க்காலதேசமும் பொய்ப்பொருளில்வாஞ்சையும்
போய்யுடலை மெய்யென்னலும்
பொய்யுறவு பற்றலும் பொய்யாகு நானென்னல்
பொய்யினும் பொய்யாகையால்
மைக்கா லிருட்டனைய விருளில்லை யிருவினைகள்
வந்தேற வழியுமில்லை
மனமில்லை யம்மனத் தினமில்லை வேறுமொரு
வரவில்லை போக்குமில்லை
அக்கால மிக்கால மென்பதிலை யெல்லாம்
அதீதமய மானதன்றோ
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மானபரமே.

தாயுமானவர் - ஆனந்தமானபரம் 10.

E. காலத்தியாயபதிட்டம்:—இது பாதிதவிடயமென்று சொல்லப்படும். பாதிதமாவது மறுப்புடையது. சாத்திய அபாவமுள்ள பஞ்சத்தையுடைய ஏதுவாகும். "தீ குளிர்ச்சியானது, பதார்த்தத் தன்மையால், ஜலம் போல" என்று கூறின் இது பாதிதமான ஏது உடையதால், இப்பாதித விடயத்தைக் காலத்தியாபதிட்டமெனக் கூறுவர். தேவாரத்தில், எல்லாம் வல்ல இறைவனைத் தாய்க்கும் தந்தைக்கும் உடன் பிறந்தாருக்கும் ஒப்பிடுதல் காலத்தியாபதிட்ட உருவகமாயினும், அது பேரன்பை விளக்கும் நல்லணியாகும்:—

ஈன்றாளு மாயெனக் கெந்தையு
மாயுடன் றோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந்
தான்மனத் துள்ளிருக்க
ஏன்றா னிமையவர்க் கன்பன்
றிருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையா யிருந்தனன்
றன்னடி யோங்களுக்கே

திருப்பாதிரிப்புலியூர் - திருவிருத்தம். 7.

ஆக, மேற்கண்ட ஏத்துவாபாசங்கள் ஐவகைகளையும் உருவகப்படுத்திச் செய்யுளில் ஒருவகை அலங்காரமாய்ப் பாடுவது நமது சமய குரவர்களின் கவிவன்மை யென்பது மேற்குறித்த உதாரணங்களால் விளங்கும். தர்க்கக்கலையில் அபாசங்களென்று விலக்கப்படும் ஒழிபுகளையும் நம் சமயகுரவர்கள் பயன்படுத்தினாரெனில் தர்க்கக்கலையின் சிறந்த பாகங்களைத் தேவார நடையில் எளிதில் கண்டு களிக்கலாம். ஏதுப் போலிகள் இவையென அறிந்து அவற்றையும் இகழாமல், இயற்கையில் வெறுக்கத்தக்க நரி, கூகை, ஆந்தை, கழுகு முதலியவற்றினை எவ்வகை அன்புடன் அவ்வவைகளுக்குள்ள இயற்கைத்தோற்றங்களில் நமது சமயகுரவர் எடுத்துக்காட்டிச் சிவன் திருவருளுடன் கூட்டுவது போல், தர்க்கக்கலையில் கடியப்பட்ட ஏத்துவாபாசங்களையும் உருவகப்படுத்தி, இறைவன் அன்புக்கும் அருளுக்கும் பொருந்தவைப்பது, இங்கு முக்கியமாய்க் கவனிக்கத்தக்கதாகும். இனி, தர்க்கக் கலையிலுள்ள ஏனைய விலக்குக்களையும் காண்போம்.

# குடி வாழ்க்கை

[Plato's Republic]

[890-வது பக்கத் தொடர்ச்சி]

நிழலையெல்லாம் பொருள் என்று மாந்தர் மதித்து, சத்தியந்தான் எதுவென்றுந் தெரியாமற்சுழலிற் பட்ட துரும்பென உழல்கையில் பெருமகன் பிளேட்டோ மனமுடைந்து இக் குடிவாழ்க்கை யென்னும் பெருநூலைச் செய்தார். இவரது நூலினை நுணுகித் தெரிந்துகொள்வதற்குக் கிரேக்கியச் சரித்திரம் சிறிது தெரிதல் அவசியமாகும். பண்டைக்காலத்தில் கிரேக்கர் வதிந்த நாட்டைஹெல்லாஸ்என்று அழைத்தனர். இப்பொழுது கிரீஸ் என்று சொல்லப்படும் நிலப்பரப்பும் துருக்கியின் ஒருசிறுபாகமும்சேர்ந்ததுபண்டைய ஹெல்லாஸ். அந்த ஹெல்லாஸ்நாடு பல சிறு நகரங்களாகப் பிரிந்து, ஒவ்வொன்றும் தனித்தனி யரசாட்சியுடன் அமைந்திருந்தது. ஆரம்பத்தில் இந்நகரங்கள் நன்னிலையிற்றான் இருந்தன. நாள் செல்லச்செல்ல வெளிநாட்டுப் போரும், உள்நாட்டுக்குழப்பமும், அரசனது ஆளுகையைப் போக்கிக் குடியரசாக மாற்றின. ஆயினும், அந்நாள்குடியரசினிற்கும் இந்நாள் முறைக்கும் வேறுபாடுண்டு.

குடியரசுமுறை உள்நாட்டில் கட்சிகளையும்குழப்பங்களையும் வளர்த்துவைத்தது. அரசியல்வாதிகளின் வளர்ச்சியுடன் தொடர்ந்த பல சிறுமைகளும் மக்களை இழிவுபடுத்த வாரம்பித்தன. மெல்லமெல்லப் பண்டையவாழ்க்கையின் ஒழுக்கமும் நியதியும் மறைந்தன. களியாட் டயர்வதே கருமமாய்க் கொண்டனர். இதற்குப் பணநடமாட்டம் மிகவும் அவசியமாதலால் வர்த்தகத்தைப் பெருக்குவதில் ஊக்கமும் முயற்சியும் அதிகமாயின. ஜனங்களின் மாறுகின்ற மனப்போக்கிற்கு ஏற்றபடி அரசாங்க முறைகளும் மாறலாயின. நாட்டினதுசட்டதிட்டங்களும் மாறின. பெருந்தகைமைக்குப் பதிலாகப் பொருளே மதிக்கப்படுவதற்குரிய ஒன்றானது. இந்நிலையில் பிளேட்டோ, மாந்தர் அடைந்த இழிவைக் காணப்பொறாமல், நிரந்தர இன்பமும் நீதியும் நன்மையும் இந் நிலஉலகில் எங்கெங்கும்நிலைத்திருக்க என்னசெய்வது என்று எண்ணத் தலைப்பட்டார். அவரது சிந்தனையின் பயனாய்க் குடிவாழ்க்கை என்னும் இப்பெருநூல் பிறக்கலாயிற்று.

பிளேட்டோ இருந்தநாளில் ஏதன்ஸ் என்னும்நகரமும் ஸ்பார்ட்டாஎன்னும் நகரமுந்தான் சிறந்த நிலையை அடைந்திருந்தன. எனினும் ஏதன்ஸ் நகரத்தில் மாந்தர் களியாட்டவாழ்க்கையில் பற்றுடையவர்களானார்கள். தனிவாழ்க்கையில் ஏற்பட்ட இம் மாறுதல், சமூகத்தையும் அரசாங்கத்தையும் மிக விரைவினில் மாற்றிவைத்தன. எங்கும் சாமர்த்தியமும் பொருளுடைமையும் தலைதூக்கிவிவகரிக்க, நியாயம் நன்மை சத்தியம் ஆகிய நலன்கள் சீர்குலைந்தன. ஏதன்ஸின் நிலை யிதுவாக, ஸ்பார்ட்டாநகரோ, பண்டைக் கட்டுப்பாட்டினின்றும் மாறாமல் இருந்தது. அன்னதற்குக் காரணம் அந்நாட்டில் இருந்த அரசியல்முறையும் ஜனங்களிடமிருந்த கட்டுப்பாடும் எளிய வாழ்க்கையுமே என்று பிளேட்டோ எண்ணினர்.

இனி, ஸ்பார்ட்டாவில் இருந்த வாழ்க்கைமுறையும், அரசியல்நெறியும் என்னவென்று சிறிது தெரிந்து

கொள்ளவேண்டும். ஸ்பார்ட்டாவிலிருந்த மக்களின் வாழ்க்கையில் ஆடம்பரம் இல்லை. மக்களுக்கும் பொருளுடைமைச் சுதந்திரம் கிடையாது. அங்குஎல்லோருக்கும்எல்லாம் பொது. கலியாணம், கல்வி, குழந்தைகளை வளர்த்தல் அனையவைகளெல்லாம் அரசாங்கத்தின் நிர்ணயத்திற்குக் கீழானவை. ஸ்பார்ட்டா ஒரு இராணுவ நிலயமேபோன்றிருக்க, அதில் வாழும் மக்கள்இராணுவவீரர்போலவும் வாழ்ந்தனர். இளம்பிராயத்தினர் வயதுமுதிர்ந்தவர்களிடம் வினயமுடையவர்களா யிருத்தல் வேண்டும். செல்வத்திற்குப் பதிலாக வயதே அங்கு மதிக்கப்பெற்றது அங்குக் கல்வி விஷயம்அரசாங்கத்தார்மேற்பார்வையிலிருந்தது. கல்வியில் புதிய முறை ஒன்றும் ஏற்படாதவாறு பார்த்துக் கொள்ளத் தனி உத்தியோகஸ்தர்களும் இருந்தனர். கடவுள்மேல் பாடப்பெற்ற பாக்களைத் தவிர மற்றைப் புதுப்பாக்களும் ஸ்பார்ட்டாவில் நுழைய இயலாது. எனவே ஹெல்லாஸில் உள்ள மற்ற நாடுகளில் ஏற்பட்ட இழிவு ஸ்பார்ட்டாவில் ஏற்படவில்லை. இந்நிலைக்குக் காரணம், அரசாங்கமுறையென்றும் சனங்களின் கட்டுப்பாடு என்றும் பிளேட்டோ கண்டார். எனினும், தத்துவ அறிவுமுதிர்ந்தவரான பிளேட்டோவிற்கு இந்த இராணுவநிலய வாழ்வு முழுதும் ஏற்கக் கூடியதாக இருக்கவில்லை. கட்டுப்பாட்டோடு சிறுமையில் பற்றுக்கொள்ளாத ஒரு தூய மனநிலையும் ஒரு சமுகத்தின்நன்மைக்கு அவசியம் என்று அவருக்குத் தோன்றியது. எனவே ஸ்பார்ட்டாவில் நடைபெற்ற முறையும், அதனை ஆராய்ந்த அவரது முற்றிய வித்தகமும் சேர்ந்து வகுத்தவொரு முடிவாகும் நாம் இது வரை மொழிபெயர்த்துத் தந்தவை.

ஒரு நாட்டில் இன்பமுடன் எல்லா நலங்களும் ஒருங்கே அமைந்து மக்கள் அனைவரும் நன்கு வாழ வேண்டுமாயின் அரசியல்வாதமும், பொருளுடைமையும், அரசாங்க மாறுதலும் இருத்தலாகாது என்றும், முற்றிய வித்தகமுடைய பெருந்தகையாளர்களே அரசினை நடத்தவேண்டுமென்றும் பிளேட்டோ முடிவாக எண்ணினர். ஸ்பார்ட்டாவின் முறையை அவர் ஏற்றார் எனினும், கட்டுப்பாட்டினால் மாத்திரம் இயக்கப்படும் ஒரு முறை நீடித்து இராது என்று அவர் கருதினர். எம்முறை ஸ்பார்ட்டாவைச் சிறந்து விளங்கச் செய்ததோ அம்முறையே இறுதியில் அந்நாடு நிலைகுலைவதற்கும் காரணமாயமைந்தது. கூட்டனிற்படுத்திய ஒரு பறவை, ஆகாச விடுதலைபெற அமயம் பார்த்திருக்கும். எனவே சட்டதிட்டத்தில் அவருக்கு நம்பிக்கை யில்லை. வித்தகமுடைய பெரியோர் சிலரால் இயக்கப்பெறும் அரசாங்கம் சட்டத்தின் துணையில்லாமலே நடக்கும். ஏனெனில் அம் மேன்மையோர் மனம் எந்நாளும், தர்மத்தில்தான் நிலைத்திருக்கும். வித்தகமே அவர்களுக்கு இன்பமாவதால் இன்பத்திற்குரிய பொருளென்று வேறு ஒன்றையும் அவர் தேடமாட்டார். சுயநலம் என்பது அவர்கள் இயற்கைக்கு அயலானது. சமுகத்தின் நலமே அவர்கள் நலம்.. தர்மமே ஆட்சியைச் செலுத்துமாயின் பின் சட்டந்தான் எதற்கு? எல்லோரும் எங்கும் இன்புற்று இருக்க வேண்டுமென்னும் நன்னினைவில் நடைபெறும் ஒரு ஆட்சிமுறையில் நன்மையே தான் எங்கும் நிலைக்கும். எனவே வித்தகமுடையோர் தலைமையில் பிளேட்டோ அரசாங்கத்தை நிறுவுகின்றார்.

பின், அத்தகைய மேன்மையோர் தலைமையில் நிலைத்திருக்குமொரு ஆட்சியில் வசிக்கின்ற மக்களின் இடமும், அவர் வாழ்க்கையின் போக்கும் இவையென வகுக்கின்றார். ஒரு அரசின் முக்கிய அங்கங்கள் மக்களாவர். மக்களது பொதுநலனுக்காகவே அரட்சி இருப்பதால் அவ்வங்கங்களின் நிலையும் முறையும் இது வென்றும், அந் நிலையினின்று அங்கங்கள் பிறழ்ந்து விவகரிக்காமற் பார்த்துக்கொள்வதே அரசாட்சியின் முக்கிய வேலையென்றும் அவர் எடுத்துக் கூறுகின்றார். அன்னதற்கு அவர், மக்களை நான்கு வகுப்பினராகப் பிரித்து அவ் வகுப்புகளுக்குரிய இடமும் தொழிலும் இது இதுவென வரையறுக்கின்றார். இது இந்தியாவில் காணப்படும் வர்ணாச்ரம தர்மத்தை யொருவாறு ஒக்கும். பிளேட்டோவின் முறையின்படி மக்கள் அவரவர் இயற்கைக்கு ஏற்றபடி நான்கு வகுப்புக்களாய்ப் பிரிகின்றனர். அந்த நான்குவகுப்பினில் முதல் இரண்டு வகுப்பினர் நாட்டினை ஆளும் வேலையினையுடையவர். மூன்றாவது வகுப்பினரும் நான்காவது வகுப்பினரும் வியாபாரம் கைத்தொழில் விவசாயம் முதலிய விவகாரங்களைச் செய்யவேண்டியவர் ஆவார். பின்னிரு இனத்தவருக்கோ அரசாட்சி விஷயத்தில் எவ்வித உரிமையுமில்லை, இருக்கவும் கூடாது, என்பதே பிளேட்டோவின் முடிவான கொள்கை. இந் நான்கு வகுப்பினரும் அவ்வவர் வகுப்பினிற்குரிய கடமைகளை முறையே செய்துவருதலே நாட்டின் நலத்திற்கு வித்தாகும் என்று பிளேட்டோ விளக்குகின்றார்.

ஒரு மனிதனுக்கு, உண்பதற்கும் உடுப்பதற்கும், அவனவன்தொழிலுக்குரிய கருவிகளைத்தேடிக்கொள்வதற்கும் எவ்வளவு வேண்டுமோ அவ்வளவிற்குமேல் பொருள் இருத்தல் கூடாதென்பது பிளேட்டோவின் அபிப்பிராயம். எனவே பெரியவியாபாரங்கள் செய்து பொருளை வளர்ப்பதென்பதற்கு அவர்முறையில்இடமில்லை. அவரதுமுறையின்படி நடைபெறும் சமுகத்திற்கு வியாபாரமும்பொருளுடைமையும் வேண்டியதுமில்லை. தத்தம் கடமையைச் செய்து, அப்படிச் செய்வதில் மகிழ்வடையும் ஒரு ஜனசமூகத்திற்குப் பொருளின் அவசியமுமில்லை. மனிதனுக்குத் தனியான நன்மையென்றும் இன்பமென்றும் ஒன்றுமில்லை. சமுகத்தின் நலமே அவன் நலம். அந் நலந்தான் துன்பக்கலப்பில்லாதநலம். மற்றவைபெல்லாம் பொய்யை மெய்யென்று கொள்ளும் துன்பத்திற்கிடமான மயக்கந்தான்.

தனிநலன் என்பது ஒவ்வொரு மனிதனையும் சுயநலமுள்ளவனாகச் செய்து போட்டியையும் குழப்பத்தையும் விளைத்துவைக்கும். மேலும் அந் நலன் என்பதும் ஒரு பொய். இன்பம் என்பது ஒரு மனநிலை. இந்நிலையில் ஏற்றம் தாழ்வு என்ற வேற்றுமை இல்லை, போட்டிக்கும் இடமில்லை. எனவே, ஒவ்வொருவனும் தன் கடமையைச் செய்வதால் பெறும் சந்தோஷமே உண்மையான சந்தோஷம். நாடாள்வதுமுதல் செருப்புத் தைத்தல்வரை எல்லாம் கடமையின்பாற் பட்டன. இதைப் பிளேட்டோ நன்கு விளக்கிக் காட்டியிருக்கின்றார்.

**அறிக்கை:—கலா நிலயத்தில் மதிப்புரை வரைவதற்குப் புத்தகம் அனுப்புவார் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டும். அப்பொழுதே புத்தகத்தின் குணங்களையுங் குற்றங்களையும் ஆய்ந்து எழுதுவோம். இல்லையேல் புத்தகத்தின் வரவுமாத்திரம் குறிக்கப்படும்.**



# ஜூலியஸ் ஸீஸர்

## [ஓர் ஷேக்ஸ்பியர் நாடகம்]

[891-வது பக்கத் தொடர்ச்சி]

### அங்கம் 5, களம் 5.

ப்ரூட்டஸ், டார்டீனியஸ், க்ளைட்டஸ், ஸ்ட்ராட்டோ, வலூம்னியஸ்
—வருகின்றனர்.

ப்ரூட்டஸ்:—எஞ்சிய வென் ஏழை நண்பர்காள், (1) வாருங்கள். இப்பாறையின்மீ தமர்ந்து இளைப்பாறுங்கள்.

க்ளைட்டஸ்:—ஸ்டாட்டிலியஸ் விளக்கொளி காட்டினான்; (2) ஆயினும் அவன் மீண்டிலன். சிறைப் பட்டனனோ கொலையுண்டனனோ அறிகிலேன்.

ப்ரூட்டஸ்:—உட்காரு நீ, க்ளைட்டஸ்; கொல்வதே சொல்லாயிற்று. (3) முறைமையாகிய செய்கையும் அது. (4). கேளிதனை க்ளைட்டஸ். (5)

[அவன் காதோடு பேசுகின்றான்]

க்ளைட்டஸ்:—என்ன; என் பெரும! உலகெலாம் பெறினும், மாட்டேன். (6)

ப்ரூட்டஸ்:—எனின் சும்மாவிரு! ஒன்றும் உரைக்காதே. (7)

க்ளைட்டஸ்:-இதனைவிட, என்னையே கொன்றுகொள்வேனே.

ப்ரூட்டஸ்:—கேள் நீ இதனை, டார்டீனியஸ்—(8)

[இவன் காதோடு பேசுகின்றான்]

டார்டீனியஸ்:—இத்தகைய காரியமும் செய்வதோ யான்?

க்ளைட்டஸ்:—ஓ, டார்டீனியஸ்! (9)

டார்டீனியஸ்:—ஓ, க்ளைட்டஸ்! (10)

க்ளைட்டஸ்:—என்ன கெடுதியை ப்ரூட்டஸ் நின்பால் வேண்டினான்? (11)

டார்டீனியஸ்:—அவனைக் கொல்வதாம், க்ளைட்டஸ் பார் நீ, ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருக்கின்றான் அவன்.

க்ளைட்டஸ்:—அப்பெருந்தகைப் பாத்திரமிப்பொழுது துயரத்தால் நிறைந்திருக்க, அவன் கண்களில் அது பெருகி வழிகின்றது. (12).

ப்ரூட்டஸ்:—நல்லவென் வலூம்னியஸ், இங்குவா; ஒரு வார்த்தை, கேள். (13)

வலூம்னியஸ்:—யாது இயம்புகின்றனை என் பெரும!

ப்ரூட்டஸ்:—இதுதான், வலூம்னியஸ்; ஸீஸரின் ஆவி உருவம், இருமுறை எனக்குத் தனித்தனி இரவிற் றோன்றியது. ஸார்டிஸ்ஸில் ஒருபோதும், முன்னிரவு இங்கு இப்பிலிப்பைக் களத்திலும் (14). என் வேளை வந்துவிட்டதென்று அறிகின்றேன். (15)

வலூம்னியஸ்:—அவ்வாறன்று, பெரும.

ப்ரூட்டஸ்:—இல்லை இல்லை. எனக்கது நிச்சயம், வலூம்னியஸ். உலகம் எவ்வாறு செல்கின்றதென, வலூம்னியஸ், நீ, காண்கின்றாய்; படுகுழிவரையில் நம்மைப் பகைவர் துரத்தி யடித்திருக்கின்றனர்.

[படையொலி கேட்கின்றது.]

(16) இனி அவர்வந்து தள்ளும்வரைத்தயங்கி நிற்காமல் நாமே குதித்துவிடுதலேசிறந்தது (17). நல்ல

டார்டேனியஸ்ஸும், க்ளைட்டஸும் ஸ்ட்ராட்டோவும் ப்ரூட்டஸின் ஏவலாளர்கள். வலூம்னியஸ், ப்ரூட்டஸின் நண்பன். மறுபோரில் தோல்வியடைந்த ப்ரூட்டஸ் தனியிடம் சிலருடன் வருகின்றான்.

(1) ஏழை நண்பர்காள், என்றது தோல்வியுற்றுத்தாழ்மையடைந்த இந்நிலையிலும் தனக்கு அவர் உண்மையாயிருக்கின்ற தன்மையை வியந்து உரைத்ததாம்.

(2) ஸ்டாட்டிலியஸ் என்பவன் விளக்கொளியினால் தான் வருவதாக அடையாளங்காட்டினான். அவன் வாராமையால் அவனுக்கு ஏதோ விபத்து நேர்ந்திருக்கவேண்டுமென்று நினைக்கிறேன்—என்பது பொருள்.

(3) (4) கொலையுண்டனனோவென்று க்ளைட்டஸ் கூறியதற்கு இது பதில். ஸ்டாட்டிலியஸ் கொலையுண்டானாயின் என்ன ஆச்சரியம் அது. கொலை கொலை என்ற சொல்லே இப்பொழுது எங்கும் வழங்குகின்றது. கொலை செய்வதே எங்கும் முறைமையான காரியமாகவும் இருக்கின்றது—என்பது பொருள்.

(5) கேளிதனை க்ளைட்டஸ்—என்று தன்னைக் கொன்றுவிடும்படி ப்ரூட்டஸ் இரகசியமாகக் கூறுகின்றான்.

(6) உலகெல்லாம் நான் பெறுவதாயினும் உன்னைக் கொல்லமாட்டேன், என்று க்ளைட்டஸ் மறுக்கின்றான்.

(7) நானுனக்குச் சொன்னதைநீ ஒருவருக்குஞ் சொல்லவேண்டா—என்பது பொருள்.

(8) தன்னைக் கொன்றுவிடும்படி ப்ரூட்டஸ் டார்டீனியஸ்ஸை வேண்டிக்கொள்கின்றான்.

(9) (10) ப்ரூட்டஸின் கதிஇப்படியாயிற்றே என்ற இரக்கத்தால், க்ளைட்டஸ்ஸும் டார்டீனியஸ்ஸும் ஒருவரை ஒருவர் இப்படி அழைத்துத் தம் துயரத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

(11) தன்னிடத்தில் சொல்லியதையேதான் ப்ரூட்டஸ் டார்டீனியஸ்ஸினிடத்திலும் சொல்லியிருக்கவேண்டுமென உணர்ந்து இப்படிக் கேட்கின்றான்.

(12) ப்ரூட்டஸ்ஸை ஓர் துயரம் நிறைந்த பாத்திரத்திற்கு ஒப்புக்கூறுகின்றான் க்ளைட்டஸ். ப்ரூட்டஸின் கண்களிலிருந்து நீர் வருவதைக்கண்டு, நிறைந்த துன்பமானது பாத்திரத்தில் அடங்காமல் பொங்கி வழிகின்றது—என்கின்றான்.

(13) இனி ப்ரூட்டஸ், தன் நண்பன் வலூம்னியஸ்ஸை அருகழைத்துத் தன்னைக் கொன்றுவிடும்படி கேட்டுக்கொள்கின்றான்.

(14) இப்பொழுது இப்பிலிப்பைக் களத்திலுந் தோன்றியது—என்று வாக்கியம் முடியும்.

முதன்முறை ஸீஸரின் ஆவி ப்ரூட்டஸிற்குத் தோன்றியதை ஷேக்ஸ்பியர் முன் காட்டினார். தன்னைமறுபடியும் பிலிப்பையில் ப்ரூட்டஸ் சந்திப்பான் என்பதைத்தான் கூறவந்ததாக அது அங்குச்சொல்லியது. அவ்வாறே இங்கும் முன்னிரவு அது ப்ரூட்டஸிற்குத் தோன்றியிருக்கின்றது. எனினும் இப்பொழுது அதன் தோற்றத்தை ஷேக்ஸ்பியர் காட்டவில்லை.

(15) ஸீஸரின் உருவம் தோன்றியதும், போர் தோற்றதும் என்னுடையமுடிவுக்காலம் வந்துவிட்டதென்பதைக் காட்டுகின்றது—என்பது பொருள்.

(16) இனி நான் தப்பும் வழி இல்லை என்னும்படி பகைவர் நம்மைத் தோற்கடித்திருக்கின்றனர். நான் நாசமடைவது நிச்சயம். ஆதலின் இனிச் சும்மா விருத்தல் உசிதமன்று.

(17) சும்மா இருப்போமாயின் அப்பகைவர் தம்வெற்றியைத் தொடர்ந்து வந்து என்னைக்கொன்றுவிடுவார். அது மிக்க பரிபவமுடைத்து. ஆகையால், அவர் என்னைக் கொல்லும் வரையில் காத்திராமல் நானே உயிரை நீத்துவிடுவதே சிறந்ததாம்—என்பது பொருள்.

வென் வலூம்னியஸ், நாமிருவரும் ஒருங்கே பாட சாலைக்குச் சென்றதை யறிவாய். பண்டைய நம் நட்பின்பொருட்டாக, உன்னை யான் வேண்டிக் கொள்கின்றேன்; இதன்மீது யான் பாயுமளவும் என் கத்திப்பிடியை நீ கைக்கொண் டிருக்கக் கடவாய். (18).

வலூம்னியஸ்:—நண்பனுக்குரியவோர் கருமமே, என் பெரும, அன்றே அது. (19)

[படையொலி இன்னும் கேட்கின்றது]

க்ளைட்டஸ்:—விரைக, விரைக, என்பெரும! இங்குத் தயங்கி இருத்தலாகாது. (20)

(18) இளமைதொட்டு நம்மிருவருக்கு மிருந்துவரும் நட்பை எண்ணி, என்னைப் பகைவர் வந்து பற்றிக்கொள்கின்ற அவமானம் நேராமல் என்னை நீ கொன்று உதவ வேண்டும். நீ இக் கத்தியைப் பிடித்துக்கொள்வாயாயின் நான் அதன்மீது பாய்ந்து மாள்வேன்.

(19) உன்னுடைய நண்பன் என்பதற்கு அடையாளமாக நீ சாகும்படி நான் கத்தியைப் பிடித்திருப்பதுதான் கடன்—என்பது பொருள்.

(20) படையொலி கேட்பதினின்று பகைவர் நெருங்கி வருவதை அறிந்த க்ளைட்டஸ், அவ்விடம்விட்டு விரைந்து அகலும்படி ப்ரூட்டஸிற்குக் கூறுகின்றான்.

# பொதிகை நிகண்டு

[893-வது பக்கத் தொடர்ச்சி]

## நகர வெதுகை

தந்தாகை கொம்பாகு நந்திசிவ னேறுஞ்
சந்துமுட்டுத் தாதுசந்தா நந்துநத்தை சங்காம்
இந்தனமே யிசைவிறகா மைந்தனுரன் மகவாம்
எந்தைபிதாச் சிவனுகும் வந்திகற்றோர் மலடாம்
கந்தமணங் கிழங்குபொறி கழுத்தடிவெற் பவையாங்
கந்துகமே பரிபந்தா மந்தகன்கால் குருடாம்
அந்தரம்விண் முடிவுநடுப் பேதமிட மைந்தாம்
அந்திசந்தி மாலையா மிரவாஞ்சிந் தனையே. 416.

சிந்துமுச்சீர் நதிகடனீர் குறள்தேசஞ் சிதராஞ்
சிந்துரம்பொட் டானைபுளி செங்குடைசெம் மையுமாம்
பந்துகட்டு நீர்த்துருத்தி கந்துகமுப் பேராம்
பந்தமே கிளைகட்டா மந்தன்மந்தன் சனியாஞ்
சந்தநிற மழகுகவி குலமிசைசாந் தாறுஞ்
சந்தானந் தருமகவா நந்தல்கெடல் வாழ்வாம்
விந்தமொரு மலைகமல மெண்ணூர்நாற் பேராம்
விந்துவிதை சோதிதுளி யெழுத்துடன்மந் திரமே. 417.

மந்திரங்கள் கோயில்மனை பரித்திரன்மே லளப்பாம்
மந்தாரஞ் செம்மரமோர் தருநோய்கார் நிழலாங்
கந்திருவம் பண்பரியாந் தந்திழைசாத் திரமாம்
கந்தரமே கழுத்துமுகில் மலைமுழைமுப் பேராம்
சந்தியிசை வந்திவேய் சதுக்கமொழி யுறுப்பாந்
தந்திகரி முயற்சையாழ் நரம்புகண பதியாம்
அந்திலாங் கசையிடமாங் கந்துதூண் முட்டாம்
அந்தணர்பார்ப் பாரறிவோ ராகுமேந் திழையே. 418.

எந்தல்கோன் பெருமைமே டிலகுவநாற் பேராம்
எந்திரந்தேர் திரிகைமதி லுறுப்பொடுசக் கரமாம்
காந்தல்காய் வொளிராகுங் காந்தியழ கொளியாங்
காந்தமழ கொளியூசிக் காந்தமொரு கதையாம்
மாந்தலிறந் திடலுணவாஞ் சாந்துசந்தங் குழம்பா
மாந்திமாக் குளிகனுமாஞ் சாந்திபொறை சுசியாங்
கூந்தல்மயிர் பீலியாங் காந்தன்கோன் பதியாம்
குந்தமே*குருந்துகண்ணோய் படைபரிகாந் துகமே.

காந்தார மிசைகாடு கொடுமையுமுப் பேராம்
கருதுசெந்து நரகோரி சிவனுறு நான்காம்
வேந்தாதல் மதியிரவி மகவான்கோன் பொன்னும்
விந்தைதிரு வணியாகு மொந்தைமொந்தல் பறைய
மாந்தானுண் ணுஞ்சுழல்வாஞ் சாந்தைபார் பொறையா
மந்திவண்டு கதிர்குரங்காங் கந்தைகங்கை துணியாம்
போந்தானே நாகரிகன் சேரன்போ னுன்பேர்
புகலுந்தி நதிகடல்கொப் பூழுருட்செப் புகவே. 420.

நகர வெதுகை முற்றும்.

## பகர வெதுகை

செப்புமொழி செப்பிரண்டா மப்பலப்பல் பொலிவாஞ்
செப்பநடு நிலைநெஞ்சு செவ்வைநெரு நான்காம்
ஒப்புநிகர் கொடைப்பொருளாங் குப்பைசெற்றை மேடாம்
உப்போரை கடலினிமை யுவரோடுப் பாகுங்
கொப்புமரக் கொம்பணியாந் தப்பலொழிப் படிப்பாங்
கொப்புழுந்தி நீர்க்குமிழாந் தப்பியம்பொய் புரையாச்
துப்பரக்கு வலுப்பகைதுய் தனுபவநெய் துகிராந்
தொப்பிமது வங்கியெனச் சொல்லுவர்தா பரித்தே.

தாபரமெய் நிலைதருவாந் தபுதல்சாக் கேடாந்
தரியூபம் படைகவந்த மகத்தறிமுப் பேராம்
நீபநிமித் தங்கடம்புத் திரட்டாதி யாகும்
நீடுசெபஞ் செபித்திடலுந் துடையுமிரு பேராம்
பூபனிறை யோன்குசனுஞ் சாபம்வில்லுச் சபிப்பாம்
போற்றுதப னன்பருதி செந்தீயு மாகுங்
கோபமறம் புழுவாம்வி பூதிசெல்வ நீறுங்
கூறபர முதுகுபிணக் காமென்னும் யாப்பே. 422.

யாப்பிறுக்கல் கவிகட்டா மிபங்கரிகோ டரமாம்
இயலுமபி தானம்வியாக் கியானமகம் பேராம்
நாப்பணடுத் தேர்த்தட்டி யாழுறுப்பு மூன்றும்
நவின்றிடுகப் பணங்கைவே லிருப்புமுள்ளு மாகும்
சீப்பெனுஞ்சொற் கதவிற்றாழ் சீவுறுசிக் கழுமாந்
திகழ்குபே ரன்சோமன் அளகையர்கோ னுகுங்
காப்புவளை திருநீறு கதவுகா வலுமாம்
கண்டிடும்பப் புவமைபரப் பாங்கமலா னனியே. 423.

பகர வேதுகை முற்றும்.

## மகர வெதுகை

கமலந்தா மரைநீராஞ் சமனடுக்கா லனுமாம்
கமலைகங்கை திருவூராந் தமயிருளி ராகம்
அமலமழ கழுக்கிலதா மமரர்தெவ்வர் சுரராம்
அமலையொலி சோறுமையா ளுமலிகள்நாய் மயிலாங்
குமரிகன்னி காளியழி யாமைகற்று ழையுமாங்
குமுதமல்லி யடுப்பொலிதிக் கானைதெற்பை யைந்தாஞ்
சிமிலியுறி குடுமிவிட்டில் மூன்றுமே ராகும்
திகழுந்த மூத்திபால் சுதைசோறென் றமையே. 424.

அமையமைதி மூங்கிலாங் கமநிறைவு செறிவாம்
அம்மைதா யழகுவரு பிறவியுமை நான்காஞ்
சிமையமலை பொதிகையா நிமிரல்சோ றிரிவாஞ்
செம்மைசெவ்வை சிவப்பாகு மம்மைசீ ரழகாஞ்
சமைபொறுமை சமையெனலா மமளியணை சினமாஞ்
சம்பிரவி நரிமும்மூர்த் திகள்நாவல் மடிவாங்



கமைதவறு பொறுமையாந் துமிதலரி வீர்ப்பாங்
கம்பயன்வான் றலைவிண்கால் வெண்மைநீர்க் காமே.

காமரநா ளடுப்பிசையாஞ் சோமன்வள்ளி லிந்தாங்
கம்பலஞ்சிம் புளிபோர்வை செம்படா மூன்றும்
எமமிர வின்புவப்பு நீறுபொன்காப் பிணைவா [ராங்
மிமைத்தலொளி யிமைத்தலாஞ் சமழ்ப்பிலச்சை துய
தாமமுடி நகரொளிதார் வடமிதழி சாந்தாஞ்
சாமமறை பசப்பிரவு விலைத்தாழ்வு கறுப்பாம்
வாமமிடப் பாலழகு துடையொளிசிந் துவுமாம்
வாமனந்திக் கானைகுறள் நூலாம்பூ மயிலே. 426.

பூமனிறை யயன்குசனு மோமமக மருந்தாம்
பூமானே யிலக்குமியு நாயகனு மாகும்
காமன்வேள் கணைமகவான் பிப்பிலிநாற் பேராம்
காமமரு ளாசைவிந்தா மூமன்புட் குனியாந்
தேமிடம்வா சந்தேச மதுரந்தே னுகும்
சேமமின்பங் காவலா நாமம்பேர் குறியாம்
மாமன்மா துலன்மாலாம் யாமம்நிசி தெற்காம்
வம்பு[பு]தி திடர்மணம்வார் நிலையாமை யம்பே. 427.

அம்புகணை நீர்மேக மூங்கில்கூர் மையுமாம்
அருட்சாமி குருவிறைவி யாழமுதல் வியுமாம்
தும்புசிம்பு தோடாகு மும்பர்சுரர் மேலாந்
தும்பிகரி வண்டாழை வண்டுமது வாகுங்
கம்புள்சங்கங் கோழிசங்காந் தும்பைதும்பை போராங்
கம்புசங்கு தினைகம்பா லொய்ம்புபெலந் தோளாம்
உம்பல்குல மெழுச்சிவலி யானைவிலங் கைந்தாம்
உறுகும்ப மத்தகமிற் குடஞ்சம்பூ ரணமே. 428.

சம்பரம்புட் கலைநீராங் கும்பிகரி சேறுஞ்
சம்பளங்கொத் தெலுமிச்சாந் தம்பந்தூண் பரமாங்
கம்பலைதுன் பொலிநெருக்க மச்சநூற் பாவாங்
கம்பநடுக் கந்தூணுங் கிம்புரிபூண் முடியாம்
அம்பணமே மரக்காலு மாமையுமென் றிருபேர்
அடுநேமி வளைகடல்பார் புள்வட்ட மைந்தாங்
கொம்புகொப்பு மருப்பாஞ்சம் பகந்தகரா ணியுமாங்
கொம்மைமுலை யழகிளமை கொட்டல்வட்ட மாமே.

ஆம்பல்வேய் கள்ளல்லி யிபமொலிவங் கியமாம்
ஆம்பிரமாப் புளிபுளிப்பாஞ் சாம்புபறை பொன்னுங்
காம்புவேய் மலர்த்தாள்கும் புதல்பட்டென் றாகும்
கடியசம்ப மோர்கோழி வச்சிரங்காழ்த் தலுமாம்
பாம்புவரைப் பரவொலிநீ ரடைப்பொழுங்கைம் பேராம்
பருந்தாம்பு மடைமணிபூண் கயிறுநான் காகுஞ்
சாம்பல்பழம் பூக்குவிவா மாம்பியொலி கானான்
றூனுமம் பரந்தூசு விண்கடலென் றயிரே. 430.

மகர வேதுகை முற்றும்.

## யகர வெதுகை.

அயமிரும்பு கடம்பரிநீ ராடிவையைம் பேராம்
அயனம்வழி யிறப்புச்சோ றூண்டினிற்பா தியுமாம்
மயல்செற்றை மால்பேயாம் வயலேசெய் வெளியாம்
மயிலைமீ னிருவாச்சி கடைராசி முப்பேர்
கயமடுக்கீழ் பெருமைதெய் வானையா ழமுமாங்
கயினியத்தங் கைம்மையாம் வயநீர்புள் வலியாம்

* சமைபெனலாமா (பி - ம்)

பயமமுத நீரச்சம் பால்பயன்பே ரைந்தாம்
பயிரொலிபைங் கூழ்பறவைக் குரல்பயிறற் பெயரே.

பெயர்பெருமை நாமமிசை பெயர்ச்சியுநாற் பேராம்
பெயலிடுதன் மழையாகுஞ் சயமடல்சற் கரையாம்
நியமநெறி நிசநியதி நகர்கோயி லைந்தாம்
நெய்கிருத நிணமாகும் பைபடம்பை பசப்பாம்
இயமொலிசொல் மேழமாம் வயினிடம்வீ டகடாம்
இயல்சாயல் நடைதமிழாம் பயன்பெறல்சொற் பொரு
வயவன்வலி யான்வீரன் கணவன்மூன் றாகு [ளாம்
மயாவுயிர்ச்சி பொருந்தாமை மயக்கமுமாங் குயிலே.

குயிலுரைகோ கிலமேகந் துளையொடுநாற் பேராங்
குயிறல்குடைந் திடல்பண்ணல் சொரிதல்கூ வுதலாம்
கயில்பிடரி யணிப்பூட்டாம் வியல்பெருமை விரிவாங்
கையிடமொப் பனைதங்கை குணம்படைகை சிறிதாம்
அயிலுணவு முனைவேலா மூயிராவி காற்றும்
ஆயஞ்சூ தியற்றல்சுங்க மாதாயஞ் சவையாஞ்
செயிர்சினங்குற் றமுமாகுஞ் செயலொழுக்கந் தொழிலாந்
தெய்கொலைதெய் வமுந்தாள முறைப்பயில்வு மாமே.

பயல்சிறுமை பள்ளமதாம் பயம்புகொப்பந் தாழ்வாம்
பாயல்மெத்தை குதிப்பாகுஞ் சாயலழ கெழலாம்
அயிரிமணல் மீன்கறியாங் குயமூலைவாள் குழகாம்
அய்யன்மூத் தவன்சாத்த னப்பன்வே தியனும்
வயிரமொரு மணிகுலிசஞ் சினஞ்சேகு வாளாம்
வயமாக்குஞ் சரம்பன்றி பரிசிங்கம் புலியாம்
உயவைகாக் கணமுல்லை கான்யாறென் றாகு
உரைசெய்யல் தொழில்காவல் சேறொழுங்கா மெய்யே.

மெய்யுடம்பு மெய்மையாம் பொய்சடம்வொந் தாகும்
வேய்துளையொற் றணிதலுமூங் கிலுநாற்பே ராகும்
ஐயிடைச்சொல் லழகிரும லரசனிற்சா மியுமாம்
ஐயையுமை துர்க்கைசுதை தவப்பெண்ணு சாளாம்
மையிருள்மை மலடாடு மேகமழுக் காரும்
வையந்தே ரேறுரோ கணிபுவியூர் தியுமாம்
வெய்யவன்வெய் யோனிரவி விருப்பினன்முப் பேராம்
வியனதிகம் பெருமையதி செயமெனமொய்த் திடுமே.

மொய்செருக்கு வண்டானை திரட்சிநாற் பேராம்
முழுநெய்த லாம்பல்பறை தினைநெய்வு நான்காம்
வையயில்வைக் கோனெல்லாஞ் செய்வயலே வலுமாம்
மாயம்வஞ் சம்பொய்யாம் பயோதரங்கார் முலையாஞ்
சையமலை யணையாம்வி யாழமகி புவியாஞ்
சாயனங்கள் ளோந்தியாந் தீயனல்தீங் காகும்
தொய்யில்சே றுழவுதுயர் மகிழ்ச்சிநாற் பேராஞ்
சொல்குய்வு கறிகரித்தல் புகையாஞ்சே யிழையே. 436.

சேயிளமை சேண்குசன்வேள் மகன்றூரஞ் சிவப்பாம்
தேயமே கழிநாடாந் தூய்தூய்மை புணவாம்
ஆய்தலே கொய்தல்நுணுக் கந்தேர்ச்சி மூன்றும்
ஐயமனு மானம்வழுச் சங்கைபிச்சை யோடாம்
காயமுட லைங்காயங் கறிகரித்தல் விண்ணுங்
காணும்வாய் குழலிடமெய் வாய்வாய்த்த லைம்பேர்
நேயமே நெய்யெண்ணெ யன்புமூன் றாகும்
நிகர்மாயன் மால்கறுப்ப னெழிப்பான்பெண் ணரசே.

யகர வேதுகை முற்றும்.

# கம்பராமாயணம்

## ஆரணிய காண்டம்—7. மாரீசன் வதைப் படலம்.

[895-வது பக்கத் தொடர்ச்சி]

நீரும் நெருப்புங் கான்றன கண்கள்.

நாசிபோகிய நங்கையும், போக்கிய மாநடரும் வாழ்கின்றார்; மற்று, மூக்கிலளாய் நிற்கின்ற தன் தங்கையைக்கண்டு மூவுலகாள்பவன் எங்ஙனம்வாழ்வான்! மூக்குங் காதும் முலைகளிரண்டும் மந்திரத்தால் மாயையால் மீண்டுமிவள் பெற்றுக்கொளலாமாயினும், அவ்வவயங்களோடு இலக்குவன் கைவாளால் போழப்பட்ட இராவணன்தன் மானத்திற் பட்ட வடு ஆறும் வகை இனி இல்லையே. என் செய்வான்—

மருந்தனைய தங்கைமணி நாசிவடி வாளால்
அரிந்தவரு மானிட ரரிந்துமுயிர் வாழ்வார்
விருந்தனைய வாளொடும் விழித்திறையும் வெள்கா
திருந்தன னிராவணனு மின்னுயிர்கொ டின்னும்

[மருந்தேபோன்ற தங்கையின் மூக்கைக் கூரிய வாளினால் அறுத்தவர்களும் மானிடர்களாம்; அவர் அறுத்தபின்னும் உயிரோ டிருப்பார்களாம். இராவணனும், சிறிதும் நாணமல், விருந்துபோன்றவாளைவைத்து விழித்துக்கொண்டு இன்னும் உயிர் சுமந்து இருக்கின்றானும்]

என எண்ணி உழல்கின்றான். உடனுறை கொடியநோயனுளவளாகும் உண்மையை ஓராமல் மருந்தெனமதித்துநிற்கின்றவன் கையிருந்தவாள் வந்தவொரு விருந்தென வாளாவிருக்கின்றது.

கொற்றமது முற்றிவலி யாலரசு கொண்டேன்
உற்றபயன் மற்றிதுவொல் காவுரை யிறந்தேன்
முற்றவுல கத்துமுதல் வீரர்முடி யெல்லாம்
அற்றபொழு தத்திதுபொ ருந்துமென லாமே.

[வெற்றியுடன் முதிர்ந்த என் வலிமையால் அரசாட்சியைப் பெற்றநான் அடைந்தபயனெல்லாம் இதுதானே! குறையாத என் புகழனைத்தையும் இதனால் நான் இழந்துவிட்டேனே! இனி, உலகமுழுவதிலுமுள்ள சிறந்த வீரர்கள் தலைகளை எல்லாம் யான் அறுத்தெறிந்த காலத்திலேனும் யான் இழந்த இப்புகழ் மறுபடி வந்து பொருந்தும் என்று சொல்லலாமோ]

மூளுமுள தாயபழி யென்வயின் முடித்தோர்
ஆளுமுள வாமவர தாருயிரு முண்டாம்
வாளுமுள தோதவிட முண்டவன் வழங்கு
நாளுமுள தோளுமுள நானுமுள னென்றான்

[புதியதாய்த் தோன்றி மேன்மேலும் வளர்கின்ற பழியை எனக்குச் செய்த மனிதர்களும் இருக்கின்றனராம். அவர்களுடைய அருமையான உயிரும் இன்னும் இருக்கின்றதாம். என் கையில் வாளும் இருக்கின்றது. கடலில் விளைந்த விஷத்தை உண்ட சிவபிரான் எனக்கு அளித்த ஆயுளும் இருக்கின்றது. என் தோள்களு மிருக்கின்றன. நானும் இருக்கின்றேன், அன்றோ—என்றான்]

வாளுந் தோளும் நாளுந் தானு மிருப்பதைநினைத்து வெறுத்தனனோ அல்லது வீறுகொண்டனனோ இராவணன்! வெறுத்திலன். இவைக ளிருக்க இப்பழியினைத் தீர்ப்பது எளிதெனத் துணிகின்றான். எனினும், பழியினைத் தீர்க்கலாம் என்று துணிவதனிடையில் உற்றபழியின் நாணத்தால் நைகின்றதவன்மனம். ஆதலின், அம்மனத்தைத் தேற்றப் புகுவான்போல்,

புத்துற வுறப்பழி புகுந்ததென நாணித்
தத்துறுவ தென்னைமன னேதளர லம்மா
எத்துய ருனக்குள தினிப்பழி சுமக்கப்
பத்துள தலைப்பகுதி தோள்கள்பல வென்றான்

[ஏ, மனமே இப்பழி, புது உறவு பாராட்டிக்கொண்டு வந்துசேர்ந்துவிட்டதே என்று வெட்கப்பட்டு நீ என் தடுமாறுகின்றாய். உறவாய் வந்த இப்பழியை எவ்வாறு தாங்குவதென்று நீ தளரவேண்டா. அந்தப் பழியை இனிச் சுமப்பதற்குத் தலைகள் பத்திருக்கின்றன, தோள்களும் பல; ஆதலின், உனக்கு என்ன துயர் இருக்கின்றது]

எனநனி முயன்று கூறினான். இம்முயற்சியினிடையில் மீண்டுமவன் தலைகளுந் தோள்களுமே வெறுப்புறுகின்றன. தன்னின்று தன் மனத்தை வேறாகப் பாவித்துப் பேசுவதுபோல் தன்னருநிலையைத் தெரிவிக்குமொரு நாடகத்திறம் தமிழ்மரபிற் கருமையன்று. அதனிலுங் கம்பர் அதிகமுங் கைவந்தவர். விடிந்தாற் கடிமணம் கூடுதற் கினிது நின்றநாள் இராமனுஞ் சீதையும் தனித்தனி விரகத்தால் இரவின்கண் ஆற்றாது வருந்துங்கால் சீதை,

கருநா யிறுபோல் பவர்கா லொடுபோய்
வருநா ளயலே வருவாய் மனனே
பெருநா ளுடனே பிரியா துழல்வாய்
ஒருநா டரியா தொழிவா ருளரோ

[கரிய சூரியன்போன்ற ஒருவரது கால்களைத் தொடர்ந்து நாயைப்போல் போய் அவர் வரும்நாளில் அவருடன் வந்து சேர்கின்ற மனமே, இனி நெடுங்காலம் அவரைவிட்டுப் பிரியாமல் திரிவாய், இந்த ஒருநாள் என்னுடன் தங்கியிருக்கப் பொறுக்காமல் உன்னைப்போல் ஒழிந்துபோகின்றவர்களும் இருக்கின்றார்களோ]

என்று, உடன்பிறந் திதுகாறும் ஒருங்கே பயின்றிருந்தும், கண்டவர் கால்களைச் சுற்றித்திரிந்து ஒருநாள் தரிக்கலாற்றாமல் ஒழிகின்ற மனத்தின் நன்றியற்ற புன்மையை இடித்துரைப்பாள் போல், அடங்கலும் இவள் இராமனுக்கு வயமான மேன்மையை விளம்புவதும், இதற்கெதிர் அக் காதற்செம்மல்,

நினையா யொருகா னெடிதோ நெறிதான்
வினவா தவர்பால் விடைகொண் டிலையோ
புனமா னனையா ரொடுபோ யினவென்
மனனே யெனைநீ யுமறந் தனையோ

[புனத்திலுள்ள மானைப்போன்றவளோடு போயின என் மனமே, என்னை ஒரு முறைகூட நினைப்பது இல்லையா நீ. அல்லது வழிதான் வெகு தூரமோ! அல்லது இங்கு என் வந்தாய் என்றுகூட முகங்கொடுத்துக் கேட்காதவளிடத்தில், விடைபெற்றுத்தான் வரவேண்டுமென்று காத்துக் கொண்டிருக்கின்றாயோ—அல்லது என்னைத்தான் நீயும் அடியுடன் மறந்துவிட்டனையோ]

என்று தன்னொடு பிறந்தும், தன்னைக் கைவிடுவதுமன்றி ஏனென்று கேட்காதாரிடத்து விடைகொள்ளக் காத்திருக்கும் மனத்தின் மானமற்ற தன்மையைக் கழறுவான்போல் தன் னுணர்வவ்வளவும் அங்கு அத்தையலாளுடன் தங்கிவிட்ட நீர்மையைத் தெரிவிப்பதும், இராவணன் இங்குத் தன் மனதை முன்னிலைப்படுத்துமாற்றால் தானுற்ற பரிபவத்தின் பொதியிற்றளர்கின்ற நிலையைத் தெரிவிப்பதையே ஒக்கும்.

மற்றினி, கரன் முதலியோர் கையரு கிருக்கச் சூர்ப்பணகையைத் தடிந்த மாநடர் மாயாதின்னம் இருப்பது எங்ஙனம் என்னுமொரு வியப்பு இராவணனுக்கு உண்டாயிற்று.



என்றுரை செயாநகை செயாவெரி விழிப்பான்
வன்துணை யிலாவிருவர் மானிடரை வாளாற்
கொன்றிலர்க ளாநெடிய குன்றுடைய கானின்
நின்றகர னேமுதலி னோர்நிருத ரென்றான்

[என்று சொல்லி இளிவரச் சிரித்து நெருப்பைப்போல் விழிப்பவனான இராவணன், சூர்ப்பணகையை நோக்கி, பெரியமலைகளையுடைய தண்டகாரண்யத்தில் வசிப்பவர்களான கரன் முதலிய அரக்கர்கள், வலிய துணையில்லாத அந்த மானுடர் இருவரை வாளால் கொன்று தீர்க்கவில்லையோ—என்றான்]

அற்றவ னுரைத்த லோடு
மழுதிழி யருவிக் கண்ணாள்
எற்றிய வயிற்றள் பாரி
னிடைவிழுந் தேங்கு கின்றாள்
சுற்றமுந் தொலைந்த தைய
நொய்தெனச் சுமந்த கையள்
உற்றது தெரியும் வண்ண
மொருவகை யுரைக்க லுற்றாள்

[அவ்வாறு அவன் கேட்க, அழுதுபெருகுகின்ற அருவிபோன்ற கண்களையுடையவளும், கைகளால் வயிற்றில் அடித்துக்கொள்பவளும், தரையில் விழுந்து அழுகின்றவளும் ஆகி, ஐயனே சுற்றத்தாரும் எளிதில் தொலைந்து போயினர்; என்று கூறிக் கைகளைத் தலைமேல் தாங்கினளாய் நிகழ்ந்தவைகளை இராவணனுக்குத் தெரியும்படி ஒருவாறு கூறலானாள்]

சுற்றத்தில் மற்றுளோரையும் தொலைக்கவந்த இப்பாவிமகள் நாக்கினில் நாசமே நடமாட,

சொல்லெண்றென் வாயிற் கேட்டார்
தொடர்ந்தெழு சேனை யோடும்
கல்லென்ற வொலியிற் சென்றார்
கரன்முதற் காளை வீரர்
எல்லொன்று கமலச் செங்கண்
இராமனென் றிசைத்த வேந்தல்
வில்லொன்றிற் கடிகை மூன்றில்
ஏறினர் விண்ணி னென்றாள்

[கரன் முதலிய காளை வீரர்கள்—விடயத்தைச் சொல்லென்று கேட்டு என் வாயிலிருந்து தெரிந்துகொண்டு, பின்தொடர்ந்தெழுந்த சேனைகளுடனே, ஆரவாரத்துடன் சென்று, சூரியன் கதிர்கள்பட்டு மலர்ந்த செந்தாமரை போன்ற கண்களுடைய இராமனென்று நான் முன் சொன்ன அந்தப் பெருமகனது ஒரு வில்லால், மூன்று நாழிகைக்குள் வானுலகத்தை அடைந்தனர்—என்றாள்.]

கேட்டனன் இராவணன். இவன் இருபது கண்களும் எரியெழ விழிப்பது புதுமையன்று; இன்று அவை அழுதன.

தாருடைத் தானை யோடுந்
தம்பியர் தமியன் செய்த
போரிடை மடிந்தா ரென்ற
வுரைசெவி புகாத முன்னம்
காரிடை யுருமின் மாரி
கனலொடு பிறக்கு மாபோல்
நீரொடு நெருப்புக் கான்ற
நிரைநெடுங் கண்க ளெல்லாம்.

[தனித்துநின்று இராமன் செய்தபோரில், கரன் முதலிய தன் தம்பிமார் மாலையணிந்த சேனையுடனே இறந்தனர் என்ற வார்த்தை இராவணன் செவிகளில் படுவதன் முன்னம், மேகத்தினிடையே மழையானது இடியும் மின்னலுமாகிய நெருப்புடனே தோன்றுவதுபோல, வரிசையாக அமைந்த அவன் கண்களெல்லாம் நீரையும் நெருப்பையும் ஒருங்கே சொரிந்தன.]

துயரமுடன் சீற்றமும் பொங்கினவாயினும், வேதமுறை நாவரும் நனிமெய்யரும் ஆகிய அவர் இவளது மூக்கைக் கொய்வதற்குரிய குற்றம் இவள் செய்திருத்தல் வேண்டுமெனும் எண்ணம் இராவணனுக் கிப்பொழுது தோன்றலாயிற்று. ஆதலின்,

ஆயிடை யெழுந்த சீற்றத் தழுந்திய துன்ப மாழித்
தீயிடை யுகுக்கு நெய்யிற் சீற்றத்திற் கூற்றஞ் செய்ய
நீயிடை யிழைத்த குற்ற மென்னைகொ னின்னை யின்னே
வாயிடை யிதழுமூக் கும்வலிந்தவர் கொய்யவென்றான்

[அப்பொழுது எழுந்த கோபத்திலே அடங்கிய துயரமானது, கடலில் உள்ள வடவாமுகாக்கினியில் சொரிந்த நெய்யைப்போல அவன் கோபத்தை உக்கிரப்படுத்த, அம்மனிதர் உன்னை இவ்வாறு வாயின் உதட்டையும் மூக்கையும் வலிந்து அறுக்கும்படி நீ அவர்களுக்குச் செய்த குற்றம் யாது என்று வினவினான்]

மூக்கினின்று வழிந்த குருதியின் தோற்றத்தால் இவள் இதழும் இழந்தாளென் றெண்ணினான்போலும். இதற்கொரு பொய்விடை இப்பொழுதே கற்பிக்க வேண்டியவ ளல்லள் இவள். முன்னரே கரனிடம்,

கண்டு நோக்கருங் காரிகை யாடனைக்
கொண்டு போவ லிலங்கையர் கோக்கென
விண்டு மேல்விழுந் தேனை வெகுண்டவர்
துண்ட மாக்கினர் மூக்கெனச் சொல்லினாள்

ஆதலின் அப்பயிற்சியால் கைவந்த இச் சூர்ப்பணகை யாதும் தாழ்வதின்றி,

என்வயி னுற்ற குற்றம்
யாவர்க்கு மெழுதொ ணாத
தன்மைய னிராம னோடுந்
தாமரை தவிரப் போந்தாள்
மின்வயின் மருங்குல் கொண்டாள்
வேய்வயின் மென்றோள் கொண்டாள்
பொன்வயின் மேனி கொண்டாள்
பொருட்டினாற் புகுந்ததென்றாள்

[என்னிடத்தில் பொருந்திய குற்றம் யாதென்றால்—எத்துணை வல்லவர்க்கும் எழுதமுடியாத வடிவழகுடையவனான இராமனுடனே செந்தாமரைமலரைவிட்டு வந்தவளும் மின்னலினிடத்திலிருந்து தன் இடுப்பைப்பெற்றவளும், மூங்கிலினிடத்திலிருந்து தன் மெல்லிய தோள்களைப்பெற்றவளும் பொன்னினிடத்திலிருந்துதன்மேனியைப்பெற்றவளும் ஆகிய ஒருத்தியின் பொருட்டு இது நேர்ந்தது, என்றாள்.]

ஆயினும் இந்தக்கள்வி, "நின்மாட்டு அன்னவளைச் சேர்ப்பிக்குமாறு யான் முயன்றவளவில் இதுசெய்தார் அவர்" எனக் கரனிடத்தில் சொல்லியதுபோல், இராவணனுக்கு முதலிற் சொல்லிவிடாமல் அவனது ஆர்வத்தைத் தூண்டுமாறு மறைத்துவிட்டனள். இவள் சூழ்ச்சியும் பலித்தது. "அவள்பொருட்டு உனக்கிது நேர்வானேன்" என்ற கேள்வி இயற்கையாய்த் தொடராமல், "ஆர் அவள்" என்றே இராவணன் விரைவுடன் வினவுகின்றான்.

## கலாநிலயச் சொல்லூடாட்டம் 12.

**இடம்—வலம்**

1. குடை.
4. ஓர் லாகிரி வஸ்து.
6. அதிகம்.
7. பாரம் தூக்கத் தலையில் வைத்துக்கொள்வது.
9. பொருந்தாத.
11. மாமன்.
12. சொன்ன.
14. இனிமை.
16. நீர்த்துளி.
17. கொடுப்பதால்.
20. தங்களுடைய.
21. சூரியன்.
23. காவிரிப்பூம்பட்டினம்.
25. மது.
26. கர்ப்பம்.
27. துயரம்.
28. கடவுள் உருவம்.
31. கீர்த்தி.
32. தங்கு.
33. ஆசைப்படமாட்டான்.
34. கலங்கு.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | ■ | 4 | | 5 | ■ | 6 | |
| ■ | 7 | | 8 | | ■ | 9 | 10 | | ■ |
| 11 | | | | ■ | 12 | | | | 13 |
| ■ | | ■ | 14 | 15 | | | ■ | 16 | |
| 17 | | 18 | | | | ■ | 19 | ■ | |
| | ■ | 20 | | ■ | 21 | | | 22 | |
| 23 | 24 | | ■ | 25 | | ■ | 26 | | ■ |
| ■ | 27 | | | | ■ | 28 | | | 29 |
| 30 | ■ | | ■ | 31 | | | ■ | 32 | |
| 33 | | | | | ■ | 34 | | | |

**மேல்—கீழ்**

2. ஆகாயத்தில்.
3. யானை.
4. விஷம்.
5. பூதம்.
6. அமிழாமல்.
8. கஸ்தூரி.
10. மேகம்.
12. பருக்கைக் கற்கள்.
13. தனியாயிருப்பவன்.
15. தராசு.
17. சினேகம்.
18. முறைகெட்ட வாதம்.
19. பாதாளலோகத்தவர்.
22. துன்பம்.
24. செவி.
25. நீர்க்கோழி.
28. அமுங்கு.
29. மாறுபாடு
30. உலகம்.

### கடைசிநாள் :—1932-வது வருடம், டிசம்பர் மாதம், 19 தேதி.

பரிசு:—கலாநிலயம், 1928, 1930, 1931 ஆகிய இவ்வருடங்களின் யாதாவது ஒன்றன் ஆப் லெதர் - கில்ட் பைண்ட் புத்தகம் ஒன்று; அல்லது இவ்வருடமேனும் அடுத்த வருடமேனும் ஒரு வருடத்திற்கு நம் பத்திரிகையை இலவசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

1. இந்தக் கட்டங்கள் மாதிரியாகவே வேறோர் காகிதத்தில் வரைந்துகொண்டு அதனில் விடையை எழுதி யனுப்பவும்.

2. அவ்வாறு அனுப்புபவர், அதனோடு நாலணாவுக்குக் காலணாத் தபால் தலைகள் (பதினாறு) அனுப்புதல் வேண்டும். இலங்கை வாசிகள் அவ்வூர்த் தபால் தலை 25 சதம் அனுப்பலாம். மலேயா தேசத்தவர் எட்டணா பெறுமான போஸ்டல் ஆர்டர்கள் அனுப்புதல் வேண்டும்.

3. பிழையற நேரிய விடைகள் அனுப்பியவர்களுடைய பேர்களை எல்லாம் சீட்டுக் குலுக்கிப் போட்டு யார் பேர் வருகின்றதோ அவர் ஒருவருக்கு மட்டுமே பரிசு அளிக்கப்படும்.

4. இவ்வண்ணம் அவ்வவ் முறை பரிசு பெற்றவர்கள் தவிர, நேரிய விடைகள் ஆறு சொல்லூடாட்டங்களுக்குத் தொடர்ச்சியாக அனுப்பியிருப்பவர்கள் பெயர்களை யெல்லாம் மற்றுமோர் முறை சீட்டுக் குலுக்கிப் போட்டு அதனில் பெயர் வருகிற ஒருவருக்கும், மேல் குறித்த வருடங்களின் யாதாவது ஒன்றன் தொகுதி இதழ்கள் பைண்ட் செய்யாமல் பரிசாக அளிக்கப்படும். இதுகாறும் நேரியவிடைகள் தொடர்ச்சியாக அனுப்பியிருப்பவர்களும் இப் பரிசிற்கு உரியவராவார்.

5. சொல்லூடாட்டங்களைப் பற்றிய எல்லா விடயங்களிலும் மானேஜர் செய்கின்ற தீர்மானமே முடிவானது. இவைகளைப்பற்றி எவ்விதக் கேள்வியும் எழுதலாகாது.

6. இந்தப் போட்டியில் நம் சந்தாதார்கள் மாத்திரமன்றி ஏனையோரும் கலந்துகொள்ளலாம்.

**விடைகளை மானேஜர், கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை.**
என்னும் விலாசத்திற் கனுப்பவும்.

### சொல்லூடாட்டம் நம்பர் 10. விடையும் முடிவும்.

நேரான விடை :—

இடம்—வலம்:—1. சிவப்பு; 4. மதகு; 7. சுரை; 8. கரடி; 9. வண்டு; 10. தவழ்; 12. தவளை; 14. மெல்ல; 15. அல்லி; 16. தோகை; 17. வடம்; 18. மையல்; 19. கவின்; 21. மிசை; 23. விசை; 26. வருக; 28. சம்பந்தர்; 30. வதம்; 32. கபி; 33. திணி; 34. நீலம்; 35. பெரியவர்; 36. பிழை.

மேல்—கீழ்:—1. சிசு; 2. வரைதல்; 3. புகழ்; 4. மடிதல்; 5. குவளை. 6. உடுக்கை; 11. வலவன்; 13. வலிமை; 14. மெழுக; 15. அம்மி; 16. தோல்வி; 20. விரும்பி; 22. சைவர்; 24. சைலம் அல்லது சையம்; 25. மந்திரி; 27. கவல; 28. சகடு அல்லது சகடை; 29. தணிய; 31. தம்பி; 34. நீர்.

நேரியவிடை யனுப்பியவர்:—K. அல்லாப்பிச்சை, கோம்பை; K. திருமலை ஐக்கையா, கோம்பை; A. சுருளியாண்டி, கோம்பை. C. பாபா பாஹிருடீன், உத்தமபாளயம்; சி. கர்தையா, மன்னூர்; A. P. L. ஷண்முகம் செட்டியார், வேகுப்பட்டி. V. சரவணமுத்து, மன்னூர்; K. நாராயண ரெட்டிகாரு, மளிகைமேடு; P. இலங்கையர், காரம்போன்; K. V. சுப்பராவ், சங்கரி துர்க்கம்; V. N. இராமஸ்வாமி ஐயங்கார், சங்கரிதுர்க்கம்; G. P. இராமச்சந்திரன், சென்னை; V. இராஜாராமன், ஆலமரத்துப்பட்டி; P.R. இராமலிங்கம் செட்டியார், பன்னுருட்டி; P. S. சிவஷண்முகம், சென்னை; A. K. வேலுப்பிள்ளை, பேராதனை; M. கங்கேசு, கெட்டா: U. N. இராமசுவாமி நாயுடு, உடுமலைப்பேட்டை. U. N. அழகர்சாமி நாயுடு, உடுமலைப்பேட்டை; L. இராஜமணி ஜோஸப் அம்மாள், உடுமலைப்பேட்டை; U. S. நாராயண ஐயர், உடுமலைப்பேட்டை. S. M. எசோதையம்மாள், உடுமலைப்பேட்டை; K. சீனிவாசன், உடுமலைப்பேட்டை; U. V. இராஜலக்ஷ்மி அம்மாள், உடுமலைப்பேட்டை; S. T. பொன்னம்பலநாத முதலியார், ஸ்ரீவைகுண்டம்; A. கனகசபைப் பிள்ளை, நாளேயா; M. முத்துராமலிங்கம், தக்காலா; S. நடராஜன், தக்காலா.

பரிசு பெற்றவர்:—U. S. நாராயண ஐயர், உடுமலைப்பேட்டை.

நேரிய விடைகள் 6 அனுப்பி இவ்வாரம் முதிர்ந்தவர்:—K. அல்லாபிச்சை, கோம்பை; S. T. பொன்னம்பலநாத முதலியார், ஸ்ரீ வைகுண்டம்.

இவ்விருவர்களில் பரிசு பெற்றவர்:—S. T. பொன்னம்பலநாத முதலியார், ஸ்ரீ வைகுண்டம்.




சென்னைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் திருவாளர் S. வையாபுரிப் பிள்ளையவர்களால்

— பதிப்பிக்கப்பெற்ற நூல்கள் —

**தமிழகராதி ஆதார நூற்றொகுதி**
**நாம தீப நிகண்டு.**

நிகண்டுகளின் வரலாறு, ஆசிரியரது காலம், நூலின் நயங்கள், முதலியன அடங்கிய சிறந்த முன்னுரை கொண்டது. பொருட் பெயர்களை விளங்கக் கூறும் செவ்விய உரைபாடமுள்ளது. நூலின்கண் வந்துள்ள பொருட்பெயர்களனைத்தையும் முற்ற வுணர்த்தும் அனுபந்தம் பெற்றது. சுமார் 12000 சொற்கள் கொண்ட சிற்றகராதியாக உதவுந் தகையது.
விலை ரூபா 2-0-0

**அரும்பொருள் விளக்க நிகண்டு.**

சிறந்த ஒரு சொற் பல்பொருள் நிகண்டு. நிகண்டுகளின் வரலாற்றினை விளக்கும் விரிந்த முன்னுரையுடன் கூடியது. சொல்லின் பொருள்களை யெளிதாகத் தெரிந்துகொள்ளுதற்குப் பலபொருளொருசொல் லகராதி சேர்க்கப்பட்டுள்ளது. விலை ரூபா 1-4-0

**கம்பராமாயணம்—உயுத்தகாண்டம்.**

முதல் மூன்று படலங்கள்: பல ஏட்டுப் பிரதிகளை ஒப்புநோக்கித் திருத்தியது; பாடபேதங்களனைத்துங் கொடுக்கப் பெற்றது. விலை ரூபா 0-6-0

**திருக்குறள்**
மூலமும் சொற்குறிப் பகராதியும் விஷய ஒப்புக்குறளும்
(வா. மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு)

சிற்றடக்கமான இப்பதிப்பில் அட்டவணைக்கு மாத்திரம் 300 பக்கங்கள் அளிக்கப்பட்டிருக்கின்றன. திருக்குறளைப் படித்து ஆராய விரும்புவார்க்கு இவ்வட்டவணை மிகவும் உபயோகமானதாகும். ஒப்புக்குறள்களைச் சேர்த்துப் பதிப்பாசிரியர் அளித்துளது மாணுக்கருக்குப் பெரிதும் பயன்தரும். இப்பதிப்பின் அருமை பயின்று பார்த்தாலன்றிச் சொல்லிக்காட்டுவது சுலபமன்று. விலை அணு 0-12-0

**களவியற் காரிகை.**

ஒரு சிறந்த அகப்பொரு ளிலக்கண நூல்; முதன் முறை இப்போதுதான் அச்சில் வெளிவந்தது. கிடைத்தற்கரிய பல அரிய நூல்களிலிருந்து எடுக்கப்பெற்ற மேற்கோள்களை யுடையது; பல அனுபந்தங்களையுடையது. தமிழாராய்ச்சியாளர்க்குப் பெரிதும்பயன்படுவது. க்ரௌன் அளவில் 170 பக்கங் கொண்டது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 3-0-0

**நூற்பொருட் குறிப்பு.**

1. இறையனார் களவியலுரை; 2. குறுந்தொகை; 3. திருக்கோவையார்; 4. நற்றிணை; 5. களவழி நாற்பது; 6. தேவாரம்; 7. வீரசோழியம்; 8. நாலாயிர திவ்யப் பிரபந்தம் முதலிய எட்டு நூல்களின் பொருட் குறிப்பு அடங்கியது. தமிழ் லெக்ஸிகன் ஆபீஸ் தலைமைப் பண்டிதர் ஸ்ரீமான் மு. இராகவையங்காரவர்களால் தொகுக்கப்பட்டது. டெம்மியளவில் 175-பக்கங்கள் உடையது. இலக்கிய ஆராய்ச்சிக்கும் சரித்திர ஆராய்ச்சிக்கும் மிக இன்றியமையாதது. சொற்பப் பிரதிகளே யுள்ளன. விலை ரூபா 10-0-0

**இராஜசுந்தரம்.**

ஒரு நவீனகம். இனிய எளிய நடையில் எழுதப் பெற்றது. விலை ரூபா 0-8-0

**தினகரமாலை யென்னும்-தினகர வெண்பா**

திருக்குறளின் அதிகாரத்திற் கொரு வெண்பாவாக 133 வெண்பாக்களைக் கொண்டது. இது ஒரு பண்டை நூல். இதைப் பதிப்பித்தவர் ஸ்ரீமான் S. வையாபுரி பிள்ளை, B.A., B.L.,
விலை அணு 0-6-0

**கலா நிலயம் ஆபீஸ், வேளாளர் தெரு, புரசை, சென்னை.**



# ANCIENT JAFFNA

MUDALIAR C. RASANAYAGAM C.C.S.

An authentic history of North Ceylon, Particularly of Jaffna based on archeological Epigraphic and linguistic researches is stated here in a connected manner from ancient times up to the occupation of the Island by the European Professor. S. Krishnasamy Iyengar has given an appreciative foreword.

**PRICE Rs. 5-8-0.**

**KALANILAYAM**

PURASAWALKAM :: VEPERY, MADRAS.



# ஏமாங்கதத் திளவரசன்

ஸ்ரீமான் T. N. சேஷாசல ஐயர் B.A., B.L.,
எழுதியவோர்
**செந்தமிழ்க்காதை.**

கலாநிலயம், வேளாளர் வீதி, புரசைபாக்கம், சென்னை. விலை ரூ. 1—4—0

# கலா நிலயம் 1930-வது வருடம் 3-வது வால்யூம்.

**தலையங்கங்கள்:—** அறியாமை வேண்டப்படும் 4. சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம். முயலுக்கு முயலவேண்டா. விளம்பினல் வெட்கக்கேடு. கல்லாதபேர்களே நல்லவர்கள் 3. நாணத்தால் நைவார் திறம். வாலின் நீளம். பெருமையின் பெருமை...முதலிய கட்டுரைகள் ஐம்பது. உலகியலோடு வாழ்க்கையின் தத்துவத்தை விளக்குவன.

**கம்பராமாயணம்:—**(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) அயோத்தியா காண்டம் முதலிரண்டு படலங்களின் விளக்க ஆராய்ச்சி அரசியலுக்குரிய அறங்களில் திருவள்ளுவர் வேதவியாசர் முதலானோர்க்கும் கம்பருக்கும் உள்ள வேறுபாடு 25-கட்டுரைகளில் விளக்கப்பட்டுளது. ஸ்ரீமான் சோமசுந்தர பாரதியார் வரைந்துள, "தசரதன் குறையும் கைகேசி நிறையும்" என்னும் நூலிற்கூறிய பொருளும் முடிவும் கம்பருடைய கருத்திற் கொவ்வாதன வென்று 25-கட்டுரைகளில் வாதிக்கப்பட்டிருக்கின்றது.

**குறுந்தொகை:—**(K. இராமரத்கம் ஐயர், B. A.) புத்தகமாய் இப்பொழுது கிடைக்காத இச்சங்கநூற் செய்யுள் நானூறும் விளக்கமான உரையுடன் பதிப்பிக்கப் பெற்றிருக்கின்றது.

**அப்பர்:—**(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் அறுபத்துநான்கு கலைகளையறிந்து கையாண்ட பெருமை விளக்கப்பெற்றிருக்கின்றது.

**இலஞ்சிப்பாவை:—**(T. S. நடராஜபிள்ளை, B. A. B. L.) Sir Walter Scott என்பவர் ஆங்கிலத்தில் பாடிய Lady of the Lake என்னும் காவியத்தைத் தழுவி எழுதிய கதை.

**மானத சாத்திரம்:—**(T. P. மீனாக்ஷிசுந்தரம் M. A., B. L.) ஆங்கிலமுறையைத் தழுவி, நடத்தை, உணவு நாட்டம், அழுகை, சிரிப்பு, தன்னெடுப்பு, தன்னொடுக்கம், புணர்ச்சி, இணைவிழைச்சி, விளையாட்டு முதலியவைகளின் தத்துவங்கள் விளக்கப்பட்டுள்ளன.

**தமிழ்ப் பாடம்:—**வில்லிபாரதம் கிருஷ்ணன் தூதுச் சருக்கமும், அஷ்டப்பிரபந்தமும் போதிப்பதுடன், புணரிலக்கணம் முழுவதும் தெற்றென விளக்கப்பெற்றிருக்கின்றது.

**நம்மாழ்வார் வைபவம்:—**(K. இராஜகோபாலா சாரியார், B. A. B. L.) விளக்கமான ஆராய்ச்சியுடன், 2-ம்பத்து 6-ம் தசகம் வரையிலும்.

இவைகளைத் தவிர, ஆங்கிலத்திலிருந்து மொழிபெயர்த்த கட்டுரைகளும், ஆச்சரிய சூடாமணி என்னும் வடமொழி நாடக மொழிபெயர்ப்பும், சிலப்பதிகாரக் கானல்வரியை அழகுற விளக்கிய 'மாதவி மாதவம்' என்னும் கட்டுரைகளும், தனிப்பாடல்களும், அண்டபுராண ஹாஸ்யப் பாடல்களும், நாயன்மார் சரித்திர உண்மைபோன்றபல கட்டுரைகளும் நிறைந்துள.

## 1931-வது வருடம் 4-வது வால்யூம்.

**தலையங்கம்:—** அகமே புறம், வாழ்வாங்கு வாழ்பவர் 10. உண்மையில் உழல்வார் திறம் 5. மெய்ம்மையை அலமரச் செய்யலாமோ 4. அருமையினு மருமை 4 மறப்பது முறுதியாமே. நள்ளாள் நகை 4. முதலிய கட்டுரைகள் 50.

**கம்பராமாயணம்:—**(T. N. சேஷாசலம் ஐயர், B. A. B. L.) கைகேசி சூழ்வினைப் படலம் முதல் அயோத்தியாகாண்டம் இறுதியாக 50 கட்டுரைகளில் ஆராயப்பெற்றிருக்கின்றது.

**சூளாமணி:—**(K. இராமரத்கம் ஐயர், B. A.) இதுகாறும் உரை யெழுதப்பெறாத இந்நூல், உரையுடன் பதிப்பிக்க ஆரம்பமாகி இவ்வாண்டில் ஐந்நூறு செய்யுள்கள் வந்துள.

**யாப்பிலக்கணம்:—**உறுப்பியலும், செய்யுளியலில் பாக்களின் இலக்கணமும்.

**அப்பர்:—**(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) அப்பர் 64 கலைகளைக் கையாண்ட பெருமை விரிவாக வரையப்பட்டிருக்கின்றது.

**ஆண்டாள்:—**(E. N. தணிகாசல முதலியார், B. A. B. L.) ஆண்டாள் பிறப்பு, இளமை, கல்வித்திறம், அனுபவம், யௌவனம், மதம், சித்தாந்தம், முத்தி முதலியவைகளின் உண்மை.

**மானத சாத்திரம்:—**(T. P. மீனாக்ஷிசுந்தரம், M. A. B. L.) புலன்களின் அமைப்பும், உணர்வு முதலியவைகளின் தத்துவமும் விளக்கப்பெற்றுள.

**பிஸாரோ நாடகம்:—**ஆங்கிலப்புலவர் R.B. Sheridan எழுதிய நாடகமொழிபெயர்ப்பு.

**நவராத்திரி நாடகம்:—**(K. N. சுந்தரேசன், B. A. Hons) ஓர் நவீன நாடகம்.

**சிதம்பரதேவர் சரிதம்:—**(Dr. V. S. அருணாசலம் பிள்ளை) முத்தியில் மனம் வைத்து உலகத்தில் விவகரிப்பார் பெருமையை உட்கொண்ட வோர் நாவல்.

**களவியற் காரிகை:—**(S. வையாபுரிப்பிள்ளை, B. A. B. L.) இதுகாறும் அச்சேறாத நூல். அகப்பொருளிலக்கணத்தின் சிறப்பை விளக்கவல்லது.

**கந்தபுராணமும் சங்க நூல்களும்:—**(பண்டிதர், திம்மப்பா ஐயர்) கந்தபுராணத்தைச் சங்கநூல்களோடு ஒப்புநோக்கி ஆராயும் கட்டுரைகள்.

இவை தவிர, மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், தமிழிரட்டையர், முதலிய கட்டுரைகள் பல.

ஒவ்வொரு வால்யூமிற்கும் விலை வருமாறு:— பைண்ட் செய்யாதது ரூ. 7 8 0
காலிகோ கில்ட் பைண்ட் ரூ. 8 8 0 ஆப்லெதர் கில்ட் பைண்ட் ரூ. 9 0 0

இவ்விலையில் தபால் அல்லது இரயில் சார்ஜ் அடங்கவில்லை. இந்தியாவில் உள்ளவர்கள் இரயில்வே பார்ஸல் மூலமாகப் பெற்றுக்கொள்ளலாம். To Pay போட்டு அனுப்புவோம். எழெட்டெணக்களுக்கு மேல் இரயில்வே கட்டணம் ஆகாது. பர்மா, ஸிலோன் இவ்விரண்டு இடங்களுக்கும் ரயிலில் அனுப்பமுடியாதாகையால் விலையுடன் தபால் பார்ஸல் சார்ஜ் ரூ. 2—4—0 சேர்த்தனுப்பவேண்டும். மலேயே, தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில் இருப்பவர் தபால் சார்ஜிக்கு ரூ 3. சேர்த்தனுப்பவேண்டும். இவைகளை வி. பி. யில் அனுப்ப இயலாது. முன்பணம் அனுப்பி எழுதல் வேண்டும்.



# வர்த்தமானம்

**ஒற்றுமை மஹாநாடு:—** அலகாபாத்தில் கூடிய ஒற்றுமை மஹாநாடு சென்ற ஒருமாதமாக முயன்று இறுதியில், எல்லா வகுப்பினராலும் ஏற்றுக்கொள்ளப் பெற்ற ஒரு முடிவைச் செய்தது. ஸ்ரீ மாளவியாவின் விடாமுயற்சியே இன்னதற்குக் காரணம் என்று, இந்துக்களும் முஸல்மான்களும் சீக்கியர்களும் கூறுகின்றனர், ஒற்றுமை மஹாநாட்டு முடிவு வருமாறு:—

எவ்வகுப்பினராயினும் அவரவர் மதவழிபாடு, பாஷை, பழக்க வழக்கம் ஆகிய இவைகள் எந்த அரசாங்க முறையாலும் பாதிக்கப்படலாகாது.

சிறுபான்மையராயுள்ள வகுப்பினர் உரிமைகளைக் காப்பது மத்திய அரசாங்கத்தின் நோக்கமா யிருக்க வேண்டும்.

பெலுசிஸ்தானத்தில் பொறுப்பாட்சி முறை ஏற்படுத்த இந்தியர் முயலவேண்டும்.

வடமேற்கு எல்லைப்புற நாட்டிற்கு, இந்தியாவிலுள்ள மற்றமாகாணங்களில் அனுஷ்டிக்கப்படும் அரசாங்கமுறை உடனே ஏற்படவேண்டும்.

இனி உத்தியோகங்கள் எல்லாம், எந்தக்கட்சியிலும் சேராதவர்களான சிலரைக்கொண்ட ஒரு கமிஷனால் அளிக்கப்படவேண்டும். இந்தக் கமிஷனில் இந்து முகமதிய சீக்கியப் பிரதிநிதிகள் இருக்கவேண்டும்.

இனி இராணுவத்தில் அதிகமான இந்தியர்கள் சேர்க்கப்படவேண்டும்.

மத்திய சட்டசபையில் 100-க்கு 32 வீதம் மகமதியர்களுக்குப் பிரதிநிதித்துவம் அளிக்கப்படவேண்டும். 100-க்கு $4\frac{2}{3}$ வீதம் சீக்கியர்களுக்குப் பிரதிநிதித்திவம் அளிக்கப்படவேண்டும்.

ஒவ்வொரு வகுப்பினருக்கும் உரிய மத விஷயமான சட்டங்களும், பழக்க முறைகளும் அவ்வகுப்பினரின் சம்மதமின்றிச் சட்டத்தால் மாற்றப்படலாகாது. முகமதியர்களுடைய மதவழிகள் எதுவும் சட்டத்தால் பாதிக்கப்படலாகாது.

பொதுத் தொகுதி முறையே எலக்ஷனில் கையாளப்படும். அத்தேர்தலில் குறைந்த ஜனத்தொகையுடையவகுப்பினர் பொதுத் தேர்தலில் மொத்த ஓட்டில் 100க்கு 30 வீதமான ஓட்டைத் தங்கள் வகுப்பினரால் பெற்றவர் அவ்வகுப்புப் பிரதிநிதியாகக்கொள்ளப்படவேண்டும். முதற் பத்து ஆண்டுகள் வரை இம்முறை நடையில் இருக்கவேண்டும்.

பிறகு ஒவ்வொரு மாகாணத்திற்கு ஏற்றவாறு இப்பொதுமுறைகளில் சில மாறுதல் எல்லா வகுப்பினரது சம்மதத்தின்படி செய்யப்பெற்றுள்ளன.

**வட்டமேஜை மஹாநாடு:—** நவம்பர் மாதம் 18-ந் தேதிபன்று லண்டனில் வட்டமேஜை மஹாநாடு மூன்றும் முறையாகக் கூடியது. முதன் மந்திரி ராம்ஸேமாக்டொனல்ட், முன்கூடிய இரண்டு மஹாநாடுகளில் செய்யப்பட்ட வேலையைத் தொடர்ந்து இப்பொழுது ஒருமுடிவைக் காணவேண்டுமென்றுகூறினாராம்.

***

**வேதமதத்தில் அரசியல் முறை:—** தர்மார்த்த காம மோக்ஷமாகிய நான்கு புருஷார்த்தங்களும் கைகூடும் வண்ணம் மக்கள் வாழ்வதற்குத்துணைசெய்ய ஒருஅரசாங்கம் அவசியமே. சாமபேத தான தண்டம் என்னும் நான்கு முறைகளும் மக்களின் நலத்தை ஒட்டி அரசாங்கத்தால் கையாளப்படவேண்டு மென்பது அர்த்தசாஸ்திரமுடிபு. ஆனால் அன்பினது ஆட்சியில் எம் முறைக்கும் இடமில்லை. எங்கும் அன்பு தழைக்கச் செய்வதே அரசனது வேலை. இன்னதற்கு ஜனங்கள் ஆத்மஞானம் எய்துவதே வாழ்க்கையின் முடிவாகுமென்பதை எண்ணி அவர்கள் அவ்வழியில் படருமாறு அரசன் தனதுமுறையினால் செய்யவேண்டும். ஆத்மஞானத்தில் பற்றுக் கொண்ட மக்கள் இருக்கும் ஒருநாட்டில் சட்டமும் போலீசும் உபயோகமற்றவை. எனவே நாட்டிலே ஆத்மஞான போதனைகளுக்குரிய பாடசாலைகள் வேண்டும். மக்கள் அப் பயிற்சி பெறுமாறும் அரசன் கவனிக்கவேண்டும். இவ்வளவே அரசாங்கத்தின் வேலை. நாட்டினில் 'துர்புத்தி' பரவா வண்ணம் காத்தலே அரசனது வேலையென்று சாஸ்திரம் முடிவாகக் கூறுகின்றது.

அர்த்த சாஸ்திரத்தில் கூறியுள்ள மற்ற முறைகள் எல்லாம் துர்புத்திவளராமற் காப்பதற்கேற்ற சாதனங்களே அல்லாமல் அவை அரசியல் தர்மம் அல்ல. அரசியலுக்கும் ஜனங்கள்வாழ்க்கைக்கும் எத்தொடர்பும் இல்லாதிருப்பதே அர்த்த சாஸ்திரத்தின் முடிவான நோக்கம்.

செல்வப் பெருக்கமுடைமை ஒரு நல்ல அரசாட்சியின் அங்கமன்று. நல்லவர்களின் செழிப்பே நாட்டின் சிறப்பினிற்குரிய அங்கம். இதுதான் நமது வேத முறை. இம்முறையினில் வர்ணாச்ரம தர்மத்திற்கு இடமுண்டு. ஜனநலத்திற்கும், ஞானவாழ்க்கைக்கும், சிறந்த அரசியலுக்கும் அவ் வர்ணாச்ரம தர்ம முறை அவசியம் என்று ஸ்ரீமத் சங்கராச்சாரியார் ஸ்வாமி ஒரு பிரசங்கத்தில் கூறியுள்ளார்.


ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட் அவர்களின்

டானிக்குகள்:

| | |
|---|---|
| பாதாமி லேகியம் | ரூ. 3-0-0 |
| ரதிவல்லப லேகியம் | 2-0-0 |
| மஹா திராக்ஷாதி லேகியம் | 2-0-0 |
| குழந்தைகளுக்கு | |
| ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை | 0-4-0 |
| பால சஞ்சீவினி | 0-4-0 |
| பால ஸுதா (டானிக்) | 1-0-0 |




தைலங்கள்:

| | |
|---|---|
| சந்தனாதி 6 அவுன்ஸ் | ரூ. 1-0-0 |
| அமிர்தாமலக „ | 0-12-0 |
| பிருங்காமலக „ | 0-12-0 |
| ஸ்திரீகளுக்கு. | |
| ஸுதக டானிக் | 2-0-0 |
| கர்ப்பாசய டானிக் | 2-0-0 |
| ப்ரஸவ லேகியம் | 1-8-0 |

சுமார் 300 போலிகள் ஏமாற்றும்.
ம.ட.ச்யாவனப்ராசா ம.ட.பிருங்காமலகதைலம் கோரோஜனை மாத்திரை
"நஞ்சன்கூடு பல்பொடி"
சாதாரணம-பாக்கெட் (ரிஜிஸ்தர் செய்துள்ளது) I.D.L. 61, மேடிகேடட்-டப்பி
தயவுசெய்து கவனித்து வாங்கவும்.

ம.ட.ச்யாவனப்ராச சிறந்த டானிக் சத்வைத்யசாலை - நஞ்சன்கூடு
மூலிகைசேர்ந்தசிற்றமணக்கு எண்ணெ காஸ்ட்ராலகஸ்
ஜவரேக் ... புண்டிட் ...

[பல்பங்கள் வைத்தியர்களுக்கு மட்டும்.] [அட்வான்... ஆர்டர் செய்ய...

# — கம்ப ராமாயணம் —

## பதவுரை விரிவுரை விளக்கம் இலக்கணக் குறிப்பு முதலியவைகளுடன்

வை. மு. சடகோப ராமாநுஜாசாரியார்
சே. கிருஷ்ணமாசாரியார்
வை. மு. கோபால கிருஷ்ணமாசாரியார்.

ஆகியவர்களால் பதிப்பிக்கப் பெற்றவை.

| | | | | |
|---|---|---|---|---|
| பால காண்டம் ... ... ... ... | ரூ. | 5 | 0 | 0 |
| அயோத்தியா காண்டம் ... ... ... ... | ,, | 5 | 0 | 0 |
| ஆரணிய காண்டம் ... ... ... ... | ,, | 4 | 0 | 0 |
| கிட்கிந்தா காண்டம் ... ... ... ... | ,, | 4 | 8 | 0 |
| சுந்தர காண்டம் ... ... ... ... | ,, | 5 | 0 | 0 |
| யுத்த காண்டம்—2 பாகம் ... ... ... ... | ,, | 10 | 0 | 0 |

தபால், அல்லது இரயில் பார்ஸல் கட்டணங்கள் வேறு. வேண்டுவோர், தாம் வேண்டும் புத்தகங்களுக்குரிய விலையில் பாதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும். மற்றதை வி. பி. மூலம் பெற்றுக்கொள்வோம்.

மானேஜர்:— கலாநிலயம், வேளாளர் வீதி, புரசை, சென்னை.



## :: அமிர்த சாகரம் ::

தேக பலத்தையும், ஞாபகவிருத்தியையும், பும்ஸத்வத்தையும், கொடுப்பதில் எங்கள்

அமிர்தார்ணவ லேகியம்

அமிர்தசாகரம் போன்றது. மேலும், நீடித்த தலைவலி, மண்டை இடி, மாரு வலி, தேகச் சூடு முதலிய வியாதிகளைக் கரஸ்தமாகக் கண்டிக்கும். 20-தோலா லேகியம் கொண்ட டப்பி 1-க்கு ரூபா 2.

இனும்! ஆரோக்கிய கிரந்தம் இனும்!

கேட்போருக்கு இனமாகவும், தபாற்செலவில்லாமலும் அனுப்பப்படும்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே, மதராஸ்.



## கற்பக மலர் (சிறு கதைகள்)

(ஆசிரியர் - சகோதரி வி. பாலம்மாள்)

மலர் 1 - விருந்தில் விலங்கு - விலை அணா 3.
மலர் 2 - அவள் இஷ்டம் - விலை அணா 3.
ஏழணா ஸ்டாம்புக்கு 2-புத்தகங்கள் அனுப்பப்படும்.
ஸ்ரீமதி பிரசுராலயம், மயிலாப்பூர், சென்னை.



## பாரத வசனம்.

ஆதிபர்வம் 3-8-0. ஸபா, ஆரண்ய, விராட பர்வங்கள் அடங்கியது ரூபா 5-0-0. உத்தியோக, பீஷ்ம, துரோண, கர்ண சல்லிய, ஸவுப்திக பர்வங்கள் அடங்கியது 5-0-0. சாந்தி, அநுசாசனிக, அச்வமேத, ஆச்ரமவாஸ, ஸ்வர்க்காரோஹண, முசல, மஹாப்ரஸ்தானிக பர்வங்கள் அடங்கியது 5-0-0.

...யில் அருதினி ஆபீஸ், 328, தங்கசாலைத் தெருவில் ஜார்ஜ்டவுன் ... மதராஸ்



## NATIONAL INSURANCE COMPANY, LIMITED.

**Head Office :**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

| | |
|---|---|
| New Policies Issued in 1931 for over ... ... | Rs. 1,32,33,000 |
| Showing an increase over the New Business figure for 1930 of ... ... | 16.54 % |
| Claims paid up to end of 1931 over ... ... | Rs. 90,00,000 |
| Invested Funds amount to over | Rs. 1,75,00,000 |

LOW RATES — LIBERAL CONDITIONS
NEW TABLES — NEW BENEFITS

For particulars & Agencies please write to:—

R. G. DAS & Co., *Managers.* OR The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras.

## FIRE & ACCIDENT RISKS

**covered by**
**NATIONAL FIRE**
AND
**GENERAL INSURANCE COMPANY Ltd.,**
**NATIONAL INSURANCE BUILDING,**
**7, Council House Street, Calcutta.**

The Branch Secretary, Madras Branch, 113, Armenian Street, Madras. OR R. G. DAS & Co., *Managers.*



... at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L., (Editor)